
புதுமுறைப் பூகோள நூல்

பதிப்பாசிரியர்
T. S. உமாபதி M. A., L. T., (Dip in geo.)

நான்காம் வகுப்பு



வேங்கடராமா அண்டு கம்பெனி

புதுமுறைப்

பூகோள நூல்

இரண்டாம் புத்தகம் - நான்காம் வகுப்பு

பதிப்பாசிரியர் :

T. S. உமாபதி, M. A., L. T., (Dip. - in Geog.)

தலைமை ஆசிரியர்,

C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை—1.

பிரசுரகர்த்தர்கள் :

வேங்கட்ராமா அண்டு கம்பெனி,

எஸ்பிளனேட், சென்னை—1.

1955

[விலை அணா 10

முதற்பதிப்பு நவம்பர் — 1954.
இரண்டாம் பதிப்பு ஜூன் — 1955

Approved by the Text book Committee for class use. Vide Fort St. George Gazette, Supplement to Part 1-B. No. 18-C. Page 4. Dated 4th May 1955.

Rajan Electric Press, Madras—1.

முன்னுரை

'புதுமுறைப் பூகோள நூல்' என்னும் பெயருடன் வெளிவரும் இச்சிறு நூல் ஆரம்பப் பள்ளிகளில் நான்காம் வகுப்புக்குரியது. இது, 1941-ஆம் ஆண்டில் அரசியலார் சென்னை இராச்சிய ஆரம்பப் பள்ளிகளுக்கு வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தை முற்றிலும் தழுவி எழுதப்பட்டுள்ளது.

உலகத்தில் மனித வாழ்க்கையை விவரிப்பதே பூகோளத்தின் அடிப்படைத் தத்துவமாதலின், அதனை மனத்துட் கொண்டு இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடமும் இளைஞர் உள்ளத்தைக் கவருமாறு வருணனை முறையைத் தழுவி இனிய எளிய நடையில் எழுதப் பெற்றுள்ளது. சிறுவர் சிறுமியர்க்குப் படம் பார்ப்பதில் ஆவல் அதிகமாதலின் அவர்கள் மனத்தைக் கவரத்தக்க அழகிய பல சித்திரங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. பாடங்களை எளிதில் விளக்குவதற்கு இன்றியமையாத தேசப் படங்கள் ஆங்காங்குத் தரப்பட்டுள்ளன. கற்பித்த பாடங்கள் இளைஞரின் மனத்தில் இனிது பதிவதற்குத் துணைபுரியக்கூடிய பலவகைப் பயிற்சிகள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் இடம் பெற்றுள்ளன. அவற்றை ஆசிரியர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வது நலமாக இருக்கும். இச்சிறு நூலை அறிஞர் உலகம் ஆதரிக்குமென நம்புகிறேன்.

12-4-54
சென்னை.

ஆசிரியர்.

பொருளடக்கம்


இந்தியா
இயற்கை அமைப்பு
உயரம்
மலைகள்..................3,000' அடிக்கு மேல்
பீடபூமி..................1,200'–3,000' அடி
மேட்டுப்பிரதேசம் 600'–1,200' ,,
சமவெளிகள்..................0 – 600' ,,
வ.
ஆப்கனிஸ்தானம்
கைபர் கணவாய்
போலன் கணவாய்
பாகிஸ்தான்
சிந்து நதி
சிந்து நதி சமவெளி
தார் பாலைவனம்
டில்லி
இமயமலைகள்
கங்கை நதி சமவெளி
கங்கை நதி
காசி
கி. பா.
பிரம்மபுத்திரா
கராச்சி
அரவல்லி மலைகள்
விந்திய மலைகள்
நருமதை
கல்கத்தா
மகாநதி
தபதி
பம்பாய்
விசாகப்பட்டினம்
கோதாவரி
கர்க்கினடா
கிருஷ்ணா
மசூலிப்பட்டினம்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
சென்னை
அந்தமான் தீவுகள்
நிக்கோபார் தீவுகள்
இலங்கை
கொழும்பு
மைல்
0 200 400
70 80 90
30 20 10

1. கவனித்து அறிதலும், அறிந்தவற்றைக் குறித்தலும்

நீங்கள் சென்ற வகுப்பில் காற்று, மழை, மேகம், சூரிய உஷ்ணம் ஆகிய இவற்றைக் கவனித்துப் பார்த்துக் குறிப்பு எடுப்பதைக் கற்றுக்கொண்டீர்கள் அல்லவா? அவ்வாறு குறிப்பெடுக்கும் போது நீங்கள் செய்யவேண்டியவற்றை மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள்.


ஒவ்வொரு நாளும் சூரியன் உதயமாகும் நேரமும், மறையும் நேரமும் ஒன்றாக இருப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். மேலும் சூரியன் சில நாட்களில் தெளிவாகப் பிரகாசிக்கிறது. மப்பும் மந்தாரமுமாக இருக்கும் சில நாட்களில் அது தெளிவாகப் பிரகாசிப்பதில்லை.

அன்றியும், அது எல்லா மாதங்களிலும் எல்லா நாட்களிலும் ஒரே திசையில் உதிப்பதில்லை. மார்ச்சு மாதக் கடைசியிலிருந்து செப்டம்பர் வரையில் கிழக்குத் திசைக்குச் சிறிது வடக்கில் உதித்து மேற்குத் திசைக்குச் சிறிது வடக்கில் மறையும். செப்டம்பர் மாதக் கடைசியிலிருந்து மார்ச்சு மாதத்தின் தொடக்கம் வரை சூரியன் கிழக்குத் திசைக்குச் சிறிது தெற்கில் உதித்து, மேற்குத் திசைக்குச் சிறிது தெற்கில் மறையும்.

இவ்வாறு சூரியன் உதிக்கும் நேரத்திலும், மறையும் நேரத்திலும் திசையிலும் வேறுபடும் தன்மைகளை உணர்ந்து நீங்கள் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

அமாவாசை, பௌர்ணமி இவற்றைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? ஒவ்வொரு மாதத்திலும் இந்த இரண்டு நாட்களும் வருகின்றன. தினந்தோறும் இரவில் சந்திரனைக் கவனித்தால் ஓர் உண்மை வெளிப்படும். ஒரு மாதத்தில் பதினைந்து நாட்கள்வரை சந்திரன் தனது உருவத்தில் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து, கடைசியில் முழு வட்டமாகத் தெரியும். அந்த நாள் **பௌர்ணமி** எனப்படும். பௌர்ணமிக்குப் பின்னர் சந்திரன் தனது உருவத்தில் சிறிது சிறிதாகக் குறைந்து, கடைசியில் முழுதும் மறைந்துவிடுகிறது. இவ்வாறு சந்திரனின் உருவம் முற்றிலும் மறைந்திருக்கும் நாள் **அமாவாசை** எனப்படும். இந்த இரண்டு நாட்களும் ஒருமாதத்தில் வரும் தேதிகளைக் குறித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒரு வருடத்தில் ஏதாவது சில நாட்களில் கிரகணங்கள் தோன்றுகின்றன. அமாவாசை நாட்களில் சூரிய கிரகணமும், பௌர்ணமி நாட்களில் சந்திர கிரகணமும் தோன்றும். இவ்வாறு சூரிய, சந்திர கிரகணங்கள் தோன்றும் நாட்களையும் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும்.



பாரன் ஹைட்டு உஷ்ணமானி

எல்லா நாட்களிலும் சூரிய உஷ்ணம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில நாட்களில் உஷ்ணத்தின் நிலை அதிகமாகவும், சில நாட்களில் குறைவாகவும் இருக்கிறது. இவ்வாறு உஷ்ணத்தின் நிலை வேறுபடுவதை நாம் எவ்வாறு அறிந்து கொள்ளமுடியும்? ஓர் இடத்தின் உஷ்ண நிலையைக் கண்டுபிடிக்க **உஷ்ணமானி** என்னும் கருவி யொன்று இருக்கிறது. இதில் **டிகிரிகள்** என்னும் அளவுகள் குறிக்கப்பட்டிருக்கும். இக்கருவியில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடிக் குழாயில் பாதரசம் இருக்கிறது. இப்பாதரசம் ஒரு நாளில் உஷ்ணநிலை உயர உயர மேல்நோக்கிச் செல்கின்றது. இதன் மேல் நுனி எந்தக் கோட்டில் நிற்கிறதோ, அந்தக் கோட்டினுல் குறிக்கப்படும் அளவுதான் அந்த நாளின் உஷ்ணநிலை எனப்படும். இவ்வாறு நாளுக்கு நாள் வேறுபடும் உஷ்ணத்தின் நிலையையும் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

பயிற்சி

I பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய் :

மாதம்	தேதி	சூரியன் உதிக்கும் திசையும், நேரமும்	சூரியன் மறையும் திசையும், நேரமும்	உஷ்ணநிலை	அமாவாசை அல்லது பௌர்ணமி நாட்கள்	கிரகணங்கள்

II. **பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக :**

(1) அமாவாசை, பௌர்ணமி என்றால் என்ன ?

(2) சூரிய கிரகணமும், சந்திர கிரகணமும் எந்த நாட்களில் தோன்றுகின்றன?

(3) உஷ்ணமானி என்பது என்ன ?

(4) ஓரிடத்தின் உஷ்ணநிலையை உஷ்ணமானியில் எவ்வாறு அறிய முடியும் ?

2. காற்றுகள்

பிள்ளைகளே! நாம் காற்றைக் கண்ணால் காணமுடியுமா? செடி கொடிகள் அசைவதைக் கொண்டு காற்று வீசுவதை நாம் உணரமுடியுமே தவிர, அதைக்காண முடியாது. அக்காற்று எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறது. அதன் உதவியில்லாமல் உலகில் உயிருள்ள பொருள்கள் வாழ முடியாது.

காற்றின் வேகமானது எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில சமயங்களில் காற்று மிகவும் மெதுவாக வீசுகிறது. சில சமயங்களில் மிகவும் பயங்கரமாக வீசி மரங்களைச் சாய்த்து, மாளிகைகளை இடித்துத் தள்ளுகிறது. சில சமயங்களில் காற்று வீசுவதே இல்லை. அசையாத நிலையில் உள்ள காற்று **வாயு** எனப்படும்.

இதுபோலவே காற்று வீசும் திசையும் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இராமல் வேறுபடுகிறது. ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மேற்குத் திசையிலிருந்தும், தென்மேற்குத் திசையிலிருந்தும் பலமான காற்று வீசுகிறது. இது **மேல் காற்று** அல்லது **தென்மேற்குக் காற்று** எனப்படும். வடக்குத் திசையிலிருந்தும், வடகிழக்குத் திசையிலிருந்தும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வீசும் காற்று **வாடைக் காற்று** அல்லது **வடகிழக்குக் காற்று** எனப்படும். இவ்வாறே தெற்கில் இருந்து வீசும் காற்று **தென்றல் காற்று** எனவும், கிழக்கிலிருந்து வீதுவது **கீழ்க் காற்று** எனவும் கூறப்படும். காற்றுக்கு அது எந்தத் திசையிலிருந்து வீசுகிறதோ அந்தத் திசையின் பெயரே வழங்கி வருகிறது. காற்றின் திசையை அறிய ஒரு கருவி உண்டு. அதற்குக் **காற்றுத் திசைகாட்டி** என்பது பெயர்.

நம் நாட்டிற்கு மழையைத் தரக்கூடிய காற்றுகள் தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய திசைகளில் இருந்து வீசும் காற்றுகள் ஆகும். இவை குறிப்பிட்ட காலங்களில் வீசுவதால் **பருவக் காற்றுகள்** எனக் கூறப்படுகின்றன. ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மாதங்களில் காற்றின் வேகமும், திசைகளும் மாறுகின்றன.

பயிற்சி

(1) காற்றின் தன்மைகள் யாவை ?

(2) மேல் காற்று, வாடைக்காற்று இவற்றை விளக்குக.


(3) நம் நாட்டிற்கு மழையைத் தரும் பருவக் காற்றுகள் யாவை? அவை எம் மாதங்களில் வீசுகின்றன ?

(4) தென்றல், வாயு - இவை யாவை ?

3. மழை

இவ்வுலகில் வாழ்கின்ற மக்கள், மிருகங்கள், பறவைகள், புழு-பூச்சிகள் முதலிய உயிரினங்களுக்கும், மரம், செடி, கொடிகளுக்கும், புல் பூண்டுகளுக்கும் மிகவும் தேவையாக இருப்பது மழையேயாகும். காற்றைப் போலவே, மழையில்லாமல் எப்பொருளும் இருக்க முடியாது. பருவகாலங்களில் தவறாது பெய்யும் மழை இல்லாவிட்டால் நாட்டில் வறுமையும், பஞ்சமும் வளரும். ஆகையால் மழை மிகவும் அவசியமானது.

முன் பாடத்தில் காற்று எப்பொழுதும் வீசுவதில்லை என்று படித்தோம் அல்லவா? அதுபோலவே மழையும் எப்பொழுதும் பெய்வதில்லை. ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய கோடை மாதங்களில் தென்மேற்குப் பருவக்காற்றால் மழை பெய்கிறது. இது **கோடை மழை** எனக் கூறப்படுகிறது. செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய குளிர் மாதங்களில் வடகிழக்குப் பருவக் காற்றினால் மழை பெய்கிறது. இது **குளிர் கால மழை** எனக் கூறப்படுகிறது. ஜனவரி முதல் ஏப்ரல் வரை பெரும்பாலும் மழை பெய்வதில்லை.


மழை அளக்கும் கருவி

ஓர் இடத்தில் பெய்கின்ற மழையின் அளவை அறிந்துகொள்வதற்கு **மழைமானி** என்னும் கருவி உபயோகிக்கப்படுகிறது. இக்கருவியில் அளவுகள் அங்குலத்தில் குறிக்கப்பட்டிருக்கும். மழை பெய்யும் காலங்களில் இக்கருவியைத் திறந்த வெளியில் தரைமட்டத்திற்குச் சிறிது உயரமாக இருக்கும்படி வைக்கவேண்டும். இதில் விழும் மழை நீரை இருபத்துநான்கு மணிக்கு ஒருமுறை அளந்து குறித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் பெய்த மழையின் அளவுகளை அறிந்து குறித்து வந்தால், ஒரு மாதம் முழுவதும் பெய்த மழையின் மொத்த அளவை அறிந்து கொள்ள முடியும்.

பயிற்சி

I. **மழைமானியை உன் பள்ளிக்கூடத்தின் மைதானத்தில் வைத்து, ஒருமாதம் முழுவதும் பெய்யும் மழையின் அளவைக் கணக்கிட்டு எழுது.**

II. **பின் வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக :**

(1) மழை எப்படி அவசியமாகிறது ?

(2) கோடை மழை, குளிர் கால மழை – இவற்றை விளக்குக.


(3) மழை மானி என்பது என்ன ? அது எவ்வாறு உபயோகப்படுகிறது ?

4. மழையும் பனியும்

மழை காலத்தில் ஏரிகளிலும் குளங்களிலும் நீர் நிறைந்திருக்கிறது. கோடை காலத்தில் இவற்றில் உள்ள நீர் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை நீ அறிவாயா? சூரியனது வெப்பமே இதற்குக் காரணமாக இருக்கிறது. இதைப் பின்வரும் பரிசோதனை மூலமாக அறிவோம்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றிக் காய்ச்சு. அதிலிருந்து வெண்மையான புகைபோல நீராவி வெளிவருவதைக் கவனி. இவ்வாறு நீராவி வெளியேறுவதால் பாத்திரத்திலுள்ள நீர் குறைகிறது. வெளிவரும் நீராவிக்கு எதிரில் ஒரு கரும்பலகையைப் பிடி. பலகையில் படும் நீராவி, குளர்ச்சி யடைந்து நீர்த் துளிகளாக மாறுகின்றது.

இதுபோலவே கடல், ஏரி, குளம் முதலிய நீர் நிலைகளில் உள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறிக் காற்றுடன் கலப்ப



தண்ணீர் நீராவியாகிப் பிறகு மேகமாகி மழையாகிறது

தால் ஆகாயத்தை நோக்கிச் செல்கிறது. நீராவி குறைந்த காற்றைக் காட்டிலும் நீராவி அதிகமுள்ள காற்று இலேசானது. ஓரிடத்திலிருந்து மேலே போகப்போக வெப்பம் குறையும். ஆகவே நீராவி கலந்த காற்று

மேலே செல்லச் செல்ல, வெப்ப நிலையானது குளிர்ந்து அது நீர்த்துளி களாக மாறுகிறது. அந்நீர்த் துளிகளின் கூட்டமே **மேகம்** எனப்படும். மேகமானது பலமான காற்று அடிக்கும்போது ஒன்றுசேர்ந்து குளிர்ச்சி யடைந்து மழையாகப் பெய்கிறது. ஆகையால்தான் தண்ணீர் நீராவியாக மாறும் கோடை காலத்தில் நீர்நிலைகளில் தண்ணீர் குறை வாகவும், மழைக் காலத்தில் அதிகமாகவும் இருக்கிறது.

குளிர் காலத்தில் புல்பூண்டுகள்மீது படிந்து வெண்மையான முத்துக்களைப்போல விளங்கும் நீர்த்துளிகளை நீங்கள் பார்த்திருக் கிறீர்களா? இவைகளே **பனித்துளிகள்**. பூமியின் அருகில் உள்ள நீராவியானது இரவில் குளிர்ச்சியடைந்து பனித்துளிகளாக மாறு கின்றது.

பயிற்சி

I. **விடைஎழுது :**

1. நீர், ஆவியாக மாறுவது எதனால்? பரிசோதனை மூலம் விளக்குக.
2. மழை எவ்வாறு உண்டாகிறது ?
3. பனித்துளிகள் உண்டாகும் முறையை எழுதுக.

II. **சரியா ? தவறு ?**

1. மழைக்காலத்தில் நீர் நிலைகளில் தண்ணீர் குறைவாக இருக்கும்.
2. சூரிய வெப்பத்தால் நீராவி உண்டாகிறது.
3. நீராவி கலந்த காற்று மேலே செல்லச் செல்ல வெப்பநிலையில் அதிகப்படும்.
4. நீராவியே பனித்துளிகளாக மாறுகிறது.

5. நீர்நிலைகளும், நீர்ப்பாசனமும்

நமது தினசரி காரியங்களுக்கு மிகவும் தேவையாக இருப்பது தண்ணீர். உணவு தயாரிக்கவும், உடம்பில் உள்ள அழுக்குப் போகக் குளிக்கவும், குடிக்கவும் தண்ணீர் தேவையாக இருக்கிறது. நமக்கு மட்டுமேயன்றி உலகில் உள்ள மற்றைய உயிரினங்கள் எல்லா வற்றிற்கும் தண்ணீர் முக்கியமான பொருளாக இருக்கிறது. தண்ணீர் இல்லாவிடில் தாவரங்கள் முளையா.

மேகங்கள் மழையைப் பெய்வதால் நமக்குத் தண்ணீர் கிடைக் கிறது. நிலத்தின்மேல் விழும் நீரானது பல சிறு கால்வாய்களாகப் பெருகிக் கடைசியில் ஒன்றாகச் சேர்ந்து **ஆறாக** மாறுகிறது. ஆற்றுநீர் நமக்குப் பலவிதங்களிலும் பயன்படுகிறது. குளிப்பதற்கும், குடிப் பதற்கும், ஆடைகளைத் துவைப்பதற்கும் பயன்படுவதோடு, நிலங் களுக்கு நீர் பாய்ச்சுவதற்கும், படகுகளின் மூலமாய்ப் பயணஞ் செய்வ வதற்கும் **ஆறுகள்** உதவி செய்கின்றன.

ஆறுகள் இல்லாத ஊர்களில் உள்ளவர்களுக்கு ஏரிகளும், குளங்களும் பயன்படுகின்றன. மேட்டுப் பகுதியிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும் மழை நீரைத் தடுத்துக் கரையை அமைத்து **ஏரி**யை உண்டாக்குகிறார்கள். ஆற்று நீரைத் தடுத்தும் ஏரிகள் அமைக்கப்படுகின்றன.

ஆறும் ஏரியும் இல்லாத இடங்களில் கிணற்று நீர் மிகவும் உபயோகமாக இருக்கிறது. மழை பெய்யும்போது மழை நீரானது பூமியில் ஊறி, அதன் அடியில் சென்று தங்குகிறது. கிணறு வெட்டும்போது அங்குத் தேங்கிய நீரானது அதில் ஊறுகிறது.

நகரங்களில் வசிக்கும் மக்களுக்குக் குழாய்கள் மூலமாகத் தண்ணீர் கிடைக்கிறது. ஆறுகளிலும், ஏரிகளிலும் இருந்து கிடைக்கும்



கபிலை ஏற்றம்

நீரைத் தேக்கி வைத்து, வடிகட்டிச் சுத்தம் செய்து, குழாய்களின் மூலமாக நகரத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்புகிறார்கள்.

நமது இந்திய நாடு விவசாய நாடு. விவசாயம் செய்வதற்குத் தண்ணீர் மிகவும் அவசியமானதல்லவா? நமது நாட்டில் பல இடங்களில் ஆறுகளே நீர்ப்பாசனத்திற்கு மிகவும் உபயோகமாகின்றன. மழைக் காலத்தில் ஆறுகளில் பெருகியோடும் வெள்ளத்தைத் தடுத்து **அணை** கட்டி, நீரைத் தேக்கிச் சிறு கால்வாய்கள் மூலமாக நிலங்களுக்குப் பாய்ச்சுகின்றனர்.

ஆற்று நீர் கிடைக்காத இடங்களில் வசிக்கும் மக்கள் மழை நீரை ஏரிகளில் தேக்கி வைத்து, மதகுகள் மூலமாக நிலங்களுக்குப்

பாய்ச்சி நீர்ப்பாசனம் செய்கிறுர்கள். ஆறும், ஏரியும் இல்லாத இடங்களில் வசிப்பவர்கள், கிணறுகளில் ஏற்றம் போட்டு நீர் இறைத்து வயல்களுக்குப் பாய்ச்சுகின்றனர். ஏற்றங்கள் இரண்டு வகை. அவை **நெட்டேற்றம், கபிலை ஏற்றம்** என்று கூறப்படும். நெட்டேற்றத்தில் மனிதர் நீர்இறைப்பர். கபிலை ஏற்றத்தில் மாடுகளைக் கட்டி நீர் இறைப்பர். இதன் படத்தை முன் பக்கத்தில் பார்.

பயிற்சி

I. பின்வரும் வினுக்களுக்கு விடையெழுதுக:

1. ஆறுகள் நமக்கு எவ்வாறு பயன்படுகின்றன?
2. கிணற்றில் எவ்வாறு நீர் ஊறுகிறது?
3. நகர மக்களுக்குத் தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது?
4. மக்கள் நீர்ப்பாசனத்திற்காக மேற்கொள்ளும் செயல்கள் யாவை?
5. உனக்குத் தெரிந்த ஏரிகளை எழுது.

II. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்:


1. ஆறுகள் இல்லாத ஊர்களில் உள்ளவர்கள்———, ———நீரைத் தேக்கி வைத்துக் கொள்கிறுர்கள்.
2. நகரங்களில் வசிக்கும் மக்களுக்கு———மூலமாக நீர் கிடைக்கிறது.
3. நம் இந்திய நாடு———விளங்கும் நாடு.

6. ஆறுகள் உண்டாகும் விதமும் அவற்றின் வேலைகளும்

ஆறுகள் எவ்வாறு உண்டாகின்றன என்பதை நீ அறிவாயா? மழை அதிகமாகப் பெய்யும் ஒரு நாளில் நீ வசிக்கும் தெருவைக் கவனி. மழை நீர் தெருவின் இரு புறங்களிலும் வழிந்து ஓடுவதையும், மண், கல் முதலியவற்றை அடித்துக்கொண்டு செல்வதையும் பார்ப்பாய். இம் முறையில்தான் ஆறுகளும் உண்டாகின்றன.

மலையின்மீதும், உயர்ந்த பீடபூமிகளிலும் பெய்யும் மழை நீரால் ஆறு தோன்றுகிறது. மலையின் மேல் பெய்யும் மழைநீர் மலைச்சரிவுகளில் பல அருவிகளாக வழிந்து ஓடுகின்றது. அந்த அருவிகள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து சிறிய ஆறு உண்டாகிறது. பல சிறிய ஆறுகள் ஒன்று சேர்ந்து பெரிய ஆருக மாறுகின்றன. இப்படியே பரந்த பீடபூமிகளில் பெய்யும் மழை நீரும் தாழ்ந்த இடங்களை நாடி ஓடி சிறிய ஆருகிறது. பல சிற்ருறுகள் சேர்ந்து பெரிய ஆருகும்.

ஆறு மேடான பகுதிகளில் இருந்து பள்ளமான இடங்களை நோக்கிப் பாய்கின்றது. அப்போது அது மலைப்பாறைகளை உடைத்துக் கொண்டு மிக வேகமாக ஓடுகின்றது. அது சம நிலத்தை அடைந்ததும் அதன் வேகம் குறைவுபடுகிறது. இப்பகுதியில் பல சிறிய ஆறுகள் ஆற்றுடன் கலக்கின்றன. அவைகளுக்கு **உபநதிகள்** என்பது பெயராகும்.



ஆற்றின் போக்கு

உப நதிளோடு கூடிய ஆறு ஆழமும் அகலமும் பொருந்தியதாய் இருக்கிறது. ஆறு கடலோடு கலக்கும் இடத்திற்கு **டெல்ட்டா** அல்லது **முகத்துவாரம்** என்பது பெயர். இப்பகுதியில் ஆறு அகன்றும் வேகம் குறைந்தும் இருக்கிறது. இங்குள்ள நிலப்பகுதி ஆறு அடித்துக்கொண்டு வரும் வண்டல் மண் படிந்து உயர்ந்து வளமுள்ளதாக இருக்கிறது. நிலம் உயர்வதால், இங்கு ஆறு பல கிளைகளாகப் பிரியும். இவ்வாறு பிரியும் ஆறுகளுக்குக் **கிளை நதிகள்** என்பது பெயர். கிளையாறுகளின் இடையில் உள்ள நிலமே **டெல்ட்டா.** அங்குப் பயிர்கள் செழித்து வளர்கின்றன. மக்களும் அதிகமாக வசிக்கிறார்கள்.

ஆற்றில் வெள்ளம் வரும்போது அது உயர்ந்த இடங்களில் உள்ள மண்ணை அடித்துக்கொண்டு வந்து பள்ளமான இடங்களில் பரப்புகின்றது. மலைப் பகுதியில் உள்ள பாறைகளை உடைத்துக் கல்லாகவும், மணலாகவும் மாற்றுகின்றது. சில சமயங்களில் ஆறுகளில் வெள்ளம் பெருகிக் கரையை உடைத்துக் கொண்டு ஊர்களை அழித்து விளை நிலங்களை மேட்டு நிலங்களாக மாற்றிவிடுகிறது. சமீபகாலத்தில் பிரம்மபுத்திரா நதியின் கோர வெள்ளத்தினால், பாதிக்கப்பட்டு அஸ்ஸாம் இராச்சியத்தின் பலபகுதிகள் பெருத்த சேதத்தை அடைந்தன. தேயிலை விளைவிற்குப் பெயர்பெற்ற **திப்ருகார்** நகரம் பாழ்பட்டது.

இவ்வாறு ஆறுகள் பள்ளத்தை மேடாக்கியும், மேட்டைப் பள்ளமாக்கியும் மக்களுக்கு நன்மையும் தீமையும் செய்து வருகின்றன.

பயிற்சி

I. பின்வரும் வினாக்களுக்கு விடை யெழுதுக:

1. ஆறுகள் எவ்வாறு உண்டாகின்றன ?
2. டெல்ட்டா என்பது என்ன? அதன் சிறப்பை எழுதுக.
3. ஆறு செய்யும் வேலைகளை எழுதுக.

II. சரியா ? தவறு ?

1. ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் வேகமாக ஓடும்.
2. ஆறு அடித்துக்கொண்டு வரும் வண்டல்மண் நிலத்தைச் செழிப்பாக்கும்
3. ஆறுகள் சமவெளியில் வேகமாக ஓடும்.
4. ஆறுகள் மக்களுக்குத் தீமையும் புரிகின்றன.

7. உள்ளூரின் இயற்கை அமைப்பும், தாவரங்களும், பயிர் வகைகளும்

எல்லா இடங்களிலும் நிலம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில இடங்களில் மேடாகவும், சிலஇடங்களில் பள்ளமாகவும், சில இடங்களில் சரிவாகவும் இருக்கும். ஓர் ஊரை நீங்கள் பார்க்கும்போது அவ்வூரின் நிலஅமைப்பில் காணப்படும் வேறுபாடுகளைக் கவனித்து அறிதல் வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள இடங்கள் மேடு அல்லது பள்ளம் என்பதை அங்கு ஓடும் ஆறுகள் அல்லது வாய்க்கால்களின் போக்கை நோக்கி அறியமுடியும்.

மேடு பள்ளங்களை அறிந்துகொண்ட பிறகு நிலங்களின் தன்மைகளையும் அறிந்து கொள்ள வேண்டும். சில இடங்களில் பாறைகள் நிறைந்திருக்கும். சில இடங்களில் மணல் மேடுகள் காணப்படும். சில பகுதிகள் களிமண் பொருந்தியனவாகவும், சில பகுதிகள் வண்டல்மண் பொருந்தியனவாகவும் காணப்படும். சில இடங்களில் கரிசல் மண்ணும், வேறு சில இடங்களில் செம்மண்ணும் காணப்படும். மற்றும் சில இடங்கள் மணற்பிரதேசமாக இருக்கும்.

இவ்வாறு நிலங்களின் அமைப்பையும், மண்ணின் இயல்பையும் அறிந்த பிறகு, அங்கு உண்டாகும் தாவரங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். நிலத்தில் தோன்றும் மரம் செடி கொடிகளுக்கும், புல்,பூண்டுகளுக்கும் **தாவரங்கள்** என்பது பெயராகும். அவற்றில் இரண்டு வகைகள் உண்டு. எவராலும் பயிரிடப்படாமல் தாமாகவே முளைத்து வளர்பவை **இயற்கைத் தாவரங்கள்** என்றும், மக்களால் பயிரிடப்பட்டு வளர்பவை **செயற்கைத் தாவரங்கள்** என்றும் கூறப்படும்.

சில இடங்களில் **கற்றுழை, கள்ளி, ஊமத்தை, காட்டாமணக்கு** முதலிய சிறு செடிகள் தாமாகவே தோன்றி வளர்கின்றன. காட்டுப் பகுதிகளில் இருக்கும் மரங்களை எவரும் உண்டாக்கி வளர்ப்பதில்லை. அவை தாமாகவே தோன்றுகின்றன. குளம், ஏரி, ஆறு முதலிய நீர் நிலைகளின் கரையோரங்களில் தாழைப் புதர்களும், நாணற் புதர்களும் காணப்படுகின்றன. அந்நீர் நிலைகளில் தாமரை, அல்லி முதலிய கொடிகள் படர்ந்து காணப்படுகின்றன. இவை யாவும் எவராலும் பயிரிடப் படாமல் தாமாகவே உண்டாகி வளர்வதால் இயற்கைத் தாவரங்கள் ஆகும்.

இந்த இயற்கைத் தாவரங்கள் நிலங்களின் இயற்கை அமைப்புக்கு ஏற்ற முறையில் காணப்படும். மழை அதிகமாகப் பெய்யும் மலைப்பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் காடுகள் உண்டாகும். தண்ணீர் ஓடும் நீர் நிலைகளின் அருகில் தாழை, நாணல் முதலியவை தோன்றும். பரந்த மைதானங்களில் அருகம்புல், சிறு செடிகள் முதலியவை முளைக்கும்.

நிலங்களின் இயற்கையமைப்பை ஒட்டியே பலவிதமான பயிர் வகைகளும் பயிரிடப்படுகின்றன. மலைப்பகுதியை யடுத்த சம வெளிகளில் **தேயிலை, காப்பி, உருளைக்கிழங்கு** முதலியவை பயிரிடப்படுகின்றன. நீர்வசதி உள்ள நன்செய் நிலங்களில் **நெல், கரும்பு, வாழை, புகையிலை** ஆகியவை பயிரிடப்படுகின்றன. மழை குறைந்த புன்செய் நிலங்களில் **கேழ்வரகு, கம்பு, சோளம், தினை** முதலிய பயிர்வகைகள் பயிரிடப்படுகின்றன.

களிமண்ணும், மணலும் பொருந்திய கரிசல் பூமியில் பருத்தி பயிரிடப்படுகிறது. மணல் நிறைந்த ஆற்று ஓரங்களிலும், கடற்கரை ஓரங்களிலும் தென்னை மரங்களும், சவுக்கு மரங்களும் உண்டாக்கப்படுகின்றன. கிணற்றுப் பாசனவசதி பொருந்திய மேட்டு நிலங்களில் மிளகாய், காய்கறி வகைகள் பயிரிடப்படுகின்றன. இவ்வாறு நிலங்களின் தன்மைக்கு ஏற்றவாறு பலவகையான பயிர்வகைகளும் பயிரிடப்படுகின்றன.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. நிலங்களின் அமைப்பில் காணப்படும் வேறுபாடுகளை எழுதுக.
2. மண்ணின் வகைகள் யாவை?
3. பருத்தி எம்மண்ணில் பயிரிடப்படுகிறது?
4. தாவரங்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன?

5. எவை எவை இயற்கைத் தாவரங்கள்?


6. நன்செய், புன்செய் நிலங்களில் பயிரிடப்படும் பயிர்வகைகளை எழுதுக.

II. **கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்**


1. மலைப்பகுதியை யடுத்த சமவெளிகளில்———, ———, உருளைக் கிழங்கு முதலியவை பயிரிடப்படுகின்றன.
2. களிமண்ணும், ———கலந்த கரிசல் மண்ணில் ———விளைகிறது.
3. எவராலும் பயிரிடப்படாமல் தானே முளைப்பவை———.

8. பூமியின் வடிவம்

பூமியானது நம்முடைய கண்களுக்குத் தட்டையான வடிவத்தை யுடையது போலக் காணப்பட்டாலும் உண்மையில் அது பந்து போன்ற வடிவத்தை உடையதாகவே இருக்கிறது. பூமியின் வடிவத்தை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள **'குளோப்'** என்னும்



குளோப் என்னும் கோளம்



அட்சரேகைகள்

கோளத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அதை நன்றாகக் கவனித்துப் பார்த்து, சில உண்மைகளை உணர்ந்து கொள்ளுங்கள்.

நாம் கோள உருண்டையைக் கையால் சுழற்றினால் அது சுழல்கிறது. அதுபோலவே ஒரு பம்பரத்தைப் போல உள்ள **பூமி தன்னில் தானே சுழல்கிறது**. குளோபின் உட்பகுதியில் தெற்கு வடக்காக ஒரு

கம்பி இருப்பதைக் கவனியுங்கள். அது **அச்சு** எனப்படும். அதன் வடக்குமுனை **வடதுருவம்** என்றும், தெற்கு முனை **தென்துருவம்** என்றும் கூறப்படும். இந்த இரண்டு துருவங்களுக்கும் மத்தியில் சமதூரத்தில் கோள உருண்டையைச் சுற்றி வரையப்பட்டிருக்கும் கோட்டிற்குப் **பூமத்தியரேகை** என்பது பெயராகும். கோளத்தில் இருப்பதைப்போல **அச்சு** எனப்படும் கம்பியும், பூமத்தியரேகை முதலிய கோடுகளும் பூமியில் கிடையா. இவைகள் இருப்பதாக நாம் மனதில் பாவித்துக் கொள்கிறோம். கோள உருண்டையில் பூமத்திய ரேகைக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள கோடுகளைப்பார். அவை ஒன்றுக்கொன்று சமதூரத்தில் உள்ளன. இம்மாதிரியான கோடுகள் பூமத்தியரேகைக்கு வடக்கில் 90 கோடுகளும், தெற்கில் 90 கோடுகளும் உண்டு. 90-ஆவது கோடு துருவத்தைக் குறிக்கும் புள்ளியென்பதை யறியவேண்டும். அக்கோடுகளுக்கு **அட்சரேகைகள்** என்பது பெயர். உங்கள் பள்ளியில் உள்ள கோளத்தைச் சுழற்றிப் பாருங்கள். அதில் நாம் வசிக்கும் இந்தியா எங்கே இருக்கிறது? அது பூமத்திய ரேகைக்கு வடக்கில் இருப்பதைப் பார்.

பயிற்சி

I. **களிமண்ணைக்கொண்டு கோளம் ஒன்றைச் செய்து, அதன் நடுவில் ஒரு குச்சியைச் செருகு. அதன் இருமுனைகளுக்கும் வட துருவம் தென் துருவம் எனப்பெயர் கொடு. கோள உருண்டையின் மேற்பகுதியில் நடுவில் ஒரு கோடு வரைந்து பூமத்தியரேகை எனக் குறிப்பிடு.**

II. **பின்வரும் வினாக்களுக்கு விடை யெழுதுக :—**

1. வட துருவம், தென் துருவம் - இவை யாவை ?
2. பூமத்தியரேகை என்பது என்ன ?

III. **கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :—**

1. கோளத்தின் நடுவில் உள்ள ———— என்பது பூமியின் மத்தியில் இல்லை.
2. அச்சின் வட முனைக்கு ———— என்றும், தெற்குமுனை ———— என்றும் கூறப்படும்.
3. கோள உருண்டைக்கு ———— என்பது பெயர்.

9. இந்தியாவின் இயற்கை யமைப்பு

இந்தியாவின் இயற்கை யமைப்புப் படத்தைக் கவனி. இதில் பல நிறங்களும், கோடுகளும், புள்ளிகளும் காணப்படுகின்றன. இவை களைக்கொண்டு நாம் மலைகள், ஆறுகள், நகரங்கள், சமவெளிகள் முதலியவை இருக்கும் இடங்களை அறிந்து கொள்ளமுடியும்.

இப்படத்தில் **நீலநிறம்** தீட்டப்பட்டுள்ள பாகம் சமுத்திரத்தைக் குறிக்கிறது. மூன்று பாகங்களில் நீலநிறம் தீட்டப்பட்டிருப்பதால், நம் நாட்டின் மூன்று பாகங்களில் கடல்கள் சூழ்ந்திருக்கின்றன என்பதனை அறியலாம். **அரபிக்கடல், வங்காளவிரிகுடா, இந்திய சமுத்திரம்** என்பவை இந்தியாவின் எல்லைகளாக உள்ளன.

படத்தில் **ப்ச்சை நிறம்** தீட்டப்பட்ட பகுதிகள் கடலைவிடச் சிறிது உயரமான **சமவெளி**யையும், **மஞ்சள் நிறம்** தீட்டப்பட்ட பகுதிகள் சமவெளியைக் காட்டிலும் சிறிது உயரமாது **பீடபூமி**யையும், **பழுப்பு நிறம்** தீட்டப்பட்ட பகுதிகள் அதிக உயரமான **மலைப்** பகுதியையும் குறிக்கின்றன.

இந்திய நாட்டின் தெற்கில் கடற்கரையை அடுத்துச் சமவெளிகள் உள்ளன. வட இந்தியாவில் இமயமலைகளுக்கும், விந்திய மலைகளுக்கும் இடையில் சமவெளிகள் இருக்கின்றன. இந்தியாவின் தெற்கிலும் நடுவிலும் பீட பூமிகள் அமைந்திருக்கின்றன. கிழக்குக் கடற்கரையை யடுத்து **கிழக்கு மலைத் தொடர்களும்,** மேற்குக் கடற்கரையை யடுத்து **மேற்கு மலைத் தொடர்களும்**, நடுவில் **விந்திய, சாத்பூரா மலைகளும்** இருக்கின்றன. இவற்றுக்கு வடக்கில் **மாளவ பீட பூமியும்,** தெற்கில் **தட்சிணப் பீட பூமியும்** உள்ளன.

இந்தியாவின் இயற்கை யமைப்புப் படத்தில் அழுத்தமான பழுப்புநிறம் தீட்டப்பட்டுள்ள பகுதியைக் கவனி. இந்நிறம் எதை உணர்த்துகிறது? 3000 அடி உயரத்திற்கு மேற்பட்ட மலைகள் இருக்கும் இடத்தை இந்நிறம் குறிக்கின்றது. இந்தியாவின் வடக்கில் இந்நிறம் தீட்டப்பட்டிருப்பதால், அப்பகுதியில் உயர்ந்த மலைகள் இருக்கின்றன என்று தெரிகிறது. நம் நாட்டின் வடக்கில் உயரமான இமய மலைகள் அமைந்திருக்கின்றன. தென்னிந்தியாவில் கடற்கரைச் சமவெளிகளை யடுத்து மலைகள் உள்ளன.

பயிற்சி


I. இந்தியாவின் இயற்கை அமைப்புப் படம் ஒன்றை வரைந்து, அதில் உரிய நிறங்களைத் தீட்டி மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் முதலியவற்றைக் குறிக்கவும்.

II. விடை எழுதுக :

1. இந்தியாவில் பீடபூமிகளும், சமவெளிகளும் எங்கு இருக்கின்றன ?
2. இயற்கை யமைப்புப் படத்தில் நீலநிறமும், அழுத்தமான பழுப்பு நிறமும் தீட்டப்பட்ட பகுதிகள் எவற்றை உணர்த்துகின்றன ?
3. இந்தியாவைச் சூழ்ந்துள்ள கடல்கள் யாவை ?

10. இந்தியாவில் உள்ள ஆறுகள்

இந்தியாவின் இயற்கையமைப்புப் படத்தில் காணப்படும் கருமை நிறக்கோடுகள் ஆறுகளைக் குறிக்கின்றன; ஆறுகள் மலைகளில் இருந்து உற்பத்தியாகி, பள்ளத்தாக்குகள், சமவெளிகள் ஆகியவற்றின் வழியாகப் பாய்ந்து கடைசியில் கடலில் சேர்கின்றன. ஆறுகள் உற்பத்தியாகும் இடங்கள் மெல்லிய கோடுகளால் குறிக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தியாகும் இடத்தில் சிறியதாகக் காணப்படும் ஆறு சமவெளியில் பாய்ந்து செல்லும்போது வேறு பல துணையாறுகளோடு கூடி அகலத்திலும், ஆழத்திலும் அதிகப்படுகிறது. இவ்வாறு ஆறு பெருகும் தன்மையை உணர்த்துவதற்காகத் தொடக்கத்தில் மெல்லிய கோடுகளாக இருந்தவை பிறகு அகன்று கொண்டே வருகின்றன.



நதியின் போக்கு - டெல்ட்டா

சில ஆறுகள் கடலோடு கலக்கும் போது பல கிளைகளாகப் பிரிந்து 'டெல்ட்டா' எனப்படும் கழிமுகப் பிரதேசத்தை உண்டாக்குகின்றன. சில ஆறுகள், பிரிவு படாமல் கடலில் கலக்கின்றன. இந்தியாவில் உள்ள ஆறுகளில் முக்கியமான சிலவற்றைப்பற்றி நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்தியாவின் வடக்கில் இமயமலை இருக்கிறது என்பதை முன் பாடத்தில் படித்தீர்கள். அம்மலையிலிருந்து **சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா** ஆகிய நதிகள் உற்பத்தியாகின்றன.

சிந்துநதி கைலாஸ் என்னும் இமயமலைப்பகுதியில் உற்பத்தியாகி முதலில் வடமேற்காக ஓடிப் பிறகு தென் மேற்காகத்திரும்பி

நீண்ட **தூரம்** ஓடுகிறது. இது கடைசியில் **அரபிக்கடலோடு** கலக்கிறது. இதற்கு **ஜீலம், சீனுப், ரவி, பியாஸ், சட்லெஜ்** என்னும் ஐந்து உபநதிகள் இருக்கின்றன. இந்நதிகள் பாயும் பகுதி **பஞ்சாப்பு** எனப்படும். பஞ்சாப்பு என்னும் சொல்லுக்கு **ஐந்து ஆறுகள்** என்பது பொருள்.

கங்கை நதி இமயமலையில் உள்ள **கங்கோத்திரி** என்னும் பனியாற்றில் உற்பத்தியாகித் தென்கிழக்காக ஓடி **வங்காள விரிகுடாவில்** கலக்கிறது. **யமுனை, பிரம்மபுத்திரா** என்னும் நதிகள் கங்கையின் உபநதிகளாக விளங்குகின்றன. கங்கையும் யமுனையும் கலக்கும் இடத்தில் **அலகாபாத்** என்னும் பட்டணம் இருக்கிறது. இது சமவெளியை அடையும் இடத்தில் **ஹரித்துவாரம்** என்னும் ஸ்தலம் இருக்கிறது.

பிரம்மபுத்திரா நதி இமயமலையின் வடக்கே உற்பத்தியாகி இந்தியாவின் கிழக்குக் கோடியில் உள்ள பள்ளத்தாக்குகளின் வழியே ஓடிச் சமநிலத்தை யடைகிறது. இது கடலோடு நேரே கலக்காமல் கங்கையோடு சேர்ந்துவிடுகிறது.

தென்னிந்தியாவில் உள்ள நதிகளில் **காவிரி** முக்கியமானது. இது மேற்குமலைத்தொடரில் உற்பத்தியாகி மைசூர், சென்னை இராச்சியங்கள் வழியாக ஓடி வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இதைப் பற்றியும், மற்ற நதிகளைப் பற்றியும் பின்னல் படிப்போம்.

பயிற்சி

I. விடை எழுதுக :

1. ஆறுகள் இயற்கைப் படத்தில் எவ்வாறு குறிக்கப்பட்டிருக்கின்றன ?
2. இமயமலையில் இருந்து உற்பத்தியாகும் ஆறுகள் யாவை ?
3. சிந்து நதியின் உபநதிகள் எவை ?
4. கங்கை எங்கு உற்பத்தியாகி எக்கடலில் விழுகிறது ?
5. தென்னிந்திய நதிகளில் முக்கியமானது எது ? அது உற்பத்தியாகும் இடம் யாது ?


II. சரியா ? தவரு ? தவருக இருந்தால் திருத்துக :

1. சிந்துநதி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
2. கங்கை, கங்கோத்திரி என்ற இடத்தில் உற்பத்தியாகிறது.
3. பிரம்மபுத்திரா கடலோடு கலப்பதில்லை.
4. காவிரி கிழக்கு மலைத்தொடரில் உற்பத்தியாகிறது.

11. போக்குவரவு

நாம் நம் ஊருக்கு அருகில் உள்ள ஊர்களுக்குச் செல்லவேண்டுமானால் நடந்தும், வண்டிகளிலும் செல்கிறோம். தொலைவில் உள்ள ஊர்களுக்குப் புகைவண்டிகள் மூலமாகவும் செல்கிறோம். நாம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதற்குச் சாலைகளும், இருப்புப் பாதைகளும் உபயோகப்படுகின்றன.

சாலைகளில் பலவகைகள் உள்ளன. கிராமப் பகுதிகளில் உள்ள சாலை களிமண்ணால் அமைக்கப்பட்டவையாகவும், நகரத்தில் உள்ள




இந்தியாவின் இருப்புப் பாதைகள்

சாலைகள் கற்களாலும், கப்பிகளாலும், சிமிட்டியாலும் இறுக்கப்பட்டுக் கெட்டியாகப் போடப்பட்டவையாகவும் இருக்கின்றன.

இந்தியாவின் போக்குவரவு மார்க்கங்களைக் குறிக்கும் படங்களைக் கவனி. அவற்றில் இருப்புப்பாதைகள் செல்லும் மார்க்கங்களும் சாலைகள் செல்லும் மார்க்கங்களும், குறிக்கப்பட்டிருக்கும் முறையைப் பார். சாலைகளைக் குறிக்கும் கோடுகள் சம அகலமான இரட்டைக்

கோடுகளாக இருக்கின்றன. சில முக்கியமான நகரங்களில் வெவ்வேறு திசைகளிலிருந்து வரும் பல சாலைகள் ஒன்ருகச் சேர்கின்றன.

இருப்புப் பாதைகளைக் குறிக்கும் அடையாளங்களைப் படத்தில் கவனி. சில படங்களில் கறுப்புக் கோடுகளுக்குமேல் பல குறுக்குக் கோடுகள் வரையப்பட்டு, வண்டித் தொடர்போன்று காணப்படும்



இந்திய-சாலைகள்

கோடுகள் இருக்கும். சில படங்களில் சாதாரண கறுப்பு நிறக் கோடுகளும் இருப்புப் பாதைகளைக் குறிக்கும் அடையாளங்களாக இருக்கும். பல இருப்புப் பாதைகள் ஒன்று சேரும் இடம் **ஜங்ஷன்** அல்லது **இருப்புப்பாதைச் சந்திப்பு** எனப்படும். இந்த இடங்கள் படத்தில் வட்ட வடிவமான அடையாளங்களால் குறிக்கப்பட்டிருக்கும்.

பயிற்சி


1. இந்தியாவின் போக்குவரவு மார்க்கங்களைக் குறிக்கும் படத்தைப் பார்த்து மூன்று சாலைகளுக்குமேல் கூடும் இடங்களையும், இருப்புப்பாதை சந்திப்புகளையும் 'எழுதுக.

2. சாலைகளும், இருப்புப் பாதைகளும் படத்தில் எவ்வாறு குறிக்கப்பட்டிருக்கின்றன?

3. இருப்புப்பாதைச் சந்திப்புகள் எவ்வித அடையாளங்களால் குறிக்கப்பட்டிருக்கின்றன?

12. நகரங்கள்

சாலைகள், இருப்புப் பாதைகள் ஆகிய போக்குவரவு மார்க்கங்கள் பல நகரங்களை ஒன்று சேர்க்கின்றன. ஒரு தேசப் படத்தில் எல்லா



இந்திய- முக்கிய நகரங்கள்


ஊர்களின் பெயர்களும் குறிக்க முடியாதாகையால் சில முக்கியமான நகரங்களும், பட்டணங்களும் மட்டும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிறிய பட்டணங்களுக்கும், பெரிய பட்டணங்களுக்கும் உள்ள வேற்றுமையைச் சில குறிகளின் உதவியால் அறிந்துகொள்ள முடியும்.

பெரிய நகரங்கள் அமைந்துள்ள இடங்கள் சிறு சதுரங்களால் குறிக்கப்பட்டு, அவற்றின் பெயர்கள் தடித்த எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கின்றன. இவை ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கும் இடங்கள் ஆகும். இத்தகைய பெரிய நகரங்கள் இராச்சியங்களின் தலை நகரங்களாக விளங்குகின்றன. **சென்னை, பம்பாய், கல்கத்தா** ஆகிய நகரங்களை உதாரணமாகக் கூறலாம். ஐந்து லட்சத்துக்குக் கீழும், ஒரு லட்சத்துக்கு அதிகமுமான மக்கள் வசிக்கும் நகரங்கள் கறுப்புப் புள்ளிகளால் குறிக்கப்படும். **மதுரை, திருச்சி, கோயமுத்தூர்** ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஒரு லட்ச மக்களுக்குக் குறைவாக வசிக்கும் பட்டணங்கள் வட்டங்களால் குறிக்கப்படும். **கடலூர், தூத்துக்குடி** ஆகிய பட்டணங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

கிராமங்களைவிட நகரங்களில் மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். நகரங்களில் பெரும்பாலானவை முகத்துவாரத்துக்கு அருகிலும், நதிகள் கூடும் இடங்களிலும், கடற்கரையை யடுத்த இடங்களிலும் இருப்புப் பாதைகள் சந்திக்கும் இடங்களிலும் இருக்கின்றன. இந்தியாவில் இவ்வாறுள்ள சில முக்கியமான நகரங்களைப்பற்றித் தெரிந்துகொள்வோம்.


டில்லி : இது யமுனை நதிக்கரையில் இருக்கிறது. மிகவும் பழமை பொருந்திய இந்நகரம். இந்தியாவின் தலை நகரமாக விளங்குகிறது. இங்குப் பல அரசாங்கக் காரியாலயங்களும், பழமையான மாளிகைகளும் இருக்கின்றன இது ஒரு தனி 'ஸி' வகுப்பு இராச்சியமாக இருக்கிறது.

பம்பாய் : இது மேற்குக் கடற்கரையின் ஓரத்தில் உள்ள தீவில் அமைந்திருக்கிறது. இது சிறந்த துறைமுகப்பட்டினமாகவும் விளங்குகிறது. இந்நகரில் பல பருத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. சிறந்த வியாபாரத் தலமாகவும் துறைமுகமாகவும் இந்நகரம் விளங்குவதால், இதில் ஜனத்தொகை மிகுதியாக இருக்கிறது. இது ஐரோப்பிய நாடுகளை நோக்கி இருப்பதால், ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் இங்கு முதலில் வருகின்றன. ஆதலால் இதற்கு இந்தியாவின் **மேற்கு வாயில்** என்னும் பெயர் வழங்குகிறது.




பம்பாய் துறைமுகம்

கல்கத்தா : இந்நகரம் இந்தியாவில் உள்ள நகரங்கள் எல்லாவற்றையும்விடப் பெரியது. கங்கையின் உபநதியாகிய ஹூக்ளி நதிக்கரையில் இது அமைந்திருக்கிறது. அந்நதியின் எதிர்க் கரையில் **ஹௌரா** இருக்கிறது. இந்நகரிலும் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. இது ஒரு சிறந்த துறைமுகமாக விளங்குவதால் இதன் மூலமாகக் கங்கைச் சமவெளியில் கிடைக்கும் பொருள்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இது கடலினின்று எழுபது மைல் உள் நாட்டில் இருக்கிறது. ஆயினும், மிகப் பெரிய கப்பல்கள் இங்கு வந்து தங்கமுடியும்.



கல்கத்தாத் துறைமுகம்

சென்னை : இந்நகரம் கிழக்குக் கடற்கரையில் அமைந்திருக்கிறது. இதுவும் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்குகிறது. ஆனால் இது இயற்கைத் துறைமுகம் அல்ல. இது செயற்கைத் துறைமுகம். நாம் வசிக்கும் சென்னை இராச்சியத்தின் தலைநகரமாக இது விளங்குகிறது. சென்னை நகரம் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே வருகிறது. இதில் சென்னை இராச்சியத்தின் அரசாங்க அலுவலகங்கள் உள்ளன.



சென்னைத் துறைமுகம்

கொச்சி : இந்நகரம் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகப் பட்டினமாக விளங்குகிறது. இத்துறைமுகம் சமீப காலத்தில் அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. இது திருவாங்கூர்-கொச்சி இணைப்பு இராச்சியத்தைச் சேர்ந்தது. இந்த இராச்சியத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் இங்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

காசி : இது கங்கைக்கரையில் அமைந்துள்ள புண்ணியத்தலமாகும். இங்கு இருக்கும் **விசுவநாதர் கோவில்** மிகவும் பிரசித்தி பெற்றது. இது இந்துக்களுக்கு மிகவும் முக்கியமான க்ஷேத்திரம்.

பயிற்சி

I. **இந்தியாவின் படத்தை வரைந்து அதில் சென்னை, டில்லி, பம்பாய், காசி, கல்கத்தா ஆகிய நகரங்களைக் குறிப்பிடுக.**

II. **பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக :**

1. தேசப்படத்தில் பெரிய நகரங்களும், சிறிய நகரங்களும் எவ்வாறு குறிக்கப் பட்டிருக்கின்றன ?
2. கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்கள் எவ்வாறு பிரசித்தி பெற்றவை ?
3. டில்லியின் சிறப்பை விவரித்து எழுதுக.

III. **கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. டில்லி ———— கரையில் இருக்கிறது.
2. ———— நகரம் மேற்குக் கரையின் மத்தியில் விளங்குகிறது.
3. கங்கைக் கரையில் அமைந்துள்ள ———— புண்ணியத்தலமாகும்.


13. திசைகளை அறியும் விதம்

சூரியன் உதிக்கும் திசை **கிழக்கு** என்றும், மறையும் திசை **மேற்கு** என்றும் நீங்கள் அறிவீர்கள். இவற்றைக்கொண்டு மற்றைய திசைகளையும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

ஒரு தேசப்படத்தில் திசைகளைத் தெரிந்துகொள்வது எப்படி என்பதை அறிவோம். ஒரு பையன் தேசப்படத்தைப் பார்த்துக் கொண்டு அதன் எதிரில் நிற்பதாக வைத்துக் கொண்டால், அவனுடைய வலக்கைப் பக்கம் படத்திற்குக் **கிழக்கு**. இடக்கைப்பக்கம் படத்துக்கு **மேற்கு**; அப்படத்தின் தலைப்பக்கம் **வடக்கு**; அடிப்பக்கம் **தெற்கு**.

தெற்கு, கிழக்கு ஆகிய திசைகளுக்கு இடையில் உள்ள திசை **தென்கிழக்கு** எனப்படும். தெற்கு, மேற்கு ஆகியவற்றிற்கு இடையில் உள்ளது **தென்மேற்குத்** திசையாகும். வடக்கு, கிழக்கு ஆகிய திசைகளுக்கு நடுவில் உள்ளது **வடகிழக்கு** என்றும் வடக்கு, மேற்கு ஆகியவற்றிற்கு இடையில் உள்ள திசை **வடமேற்கு** என்றும் கூறப்படும். நாம் படத்தின் திசைகளை அறிந்துகொண்டால், பல இடங்கள் அமைந்துள்ள திசைகளை அறிந்துகொள்ள முடியும்.

கடலில் கப்பலைச் செலுத்திச் செல்லும் மாலுமிகள், கப்பல் எந்தத் திசையில் செல்கிறது என்பதை அறிந்து கொள்வதற்குத் **திசைகாட்டி** அல்லது **காம்பசு** எனப்படும் கருவியை உபயோகிக்கிறார்கள். இக்கருவி வட்டமாகக் கடிகாரம் போல இருக்கும்; வட்டத்தின் மீது திசைகள் குறிக்கப்பட்டிருக்கும். கருவியின் மத்தியில் உள்ள ஓர் ஆணியின் முனையில் ஒரு முள் இருக்கும். அது அம்பு போல இருக்கும். அந்த அம்பின் கூரிய முனை எப்போதும் வடக்குத் திசையைக் காட்டும். இதைக்கொண்டு திசைகளை இரவிலும் அறியலாம்.



காம்பசு

இந்தியாவின் தேசப் படத்தில் ஆறுகளின் போக்கையும், நகரங்களின் அமைப்பையும் நோக்குங்கள். டில்லி யமுனை நதிக்கு எப்பக்கத்தில் அமைந்திருக்கிறது? அது யமுனையின் தென்

கரையில் அமைந்திருப்பதைக் கவனியுங்கள். சென்னை காவிரியாற்றின் வடக்கிலும், காசி கங்கையின் தென்கரையிலும் அமைந்திருப்பதை நோக்குங்கள்.

ஓரிடத்திற்குப் புகை வண்டிகள் மூலம் செல்வதற்கும், ஆகாய விமானம் மூலம் செல்வதற்கும் வேறுபாடு இருக்கின்றது. ஆகாய விமானம் செல்லும் திசையில் இருப்புப்பாதைகள் செல்வதில்லை. சென்னையிலிருந்து கல்கத்தாவிற்கு விமான மூலமாகச் செல்லும் ஒருவன் நேர் வடகிழக்கில் செல்கிறான். புகைவண்டி மூலமாகச் செல்லும் மற்றொருவன் முதலில் நேர் வடக்காகச் சென்று, பிறகு வடகிழக்காகத் திரும்புகிறான். இவ்வாறு இருப்புப் பாதை மார்க்கத்திற்கும், ஆகாய மார்க்கத்திற்கும் திசையில் வேறுபாடுகள் இருக்கும் என்பதை அறியவேண்டும்.

பயிற்சி

I. தேசப் படத்தைப் பார்த்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :

1. திருச்சி சென்னைக்கு எந்தத் திசையில் இருக்கிறது ?
2. கல்கத்தா சென்னைக்கு எந்தத் திசையில் இருக்கிறது ?
3. வங்காள விரிகுடா இந்தியாவின் எப்பக்கத்தில் இருக்கிறது ?
4. சென்னையும், பாம்பாயும் இந்தியாவின் எந்தக் கடற்கரைகளில் இருக்கின்றன ?
5. கராச்சி நகரம் சிந்து நதிக்கு எத்திசையில் அமைந்திருக்கிறது ?


II. விடை எழுதுக :

1. காம்பசு என்பது என்ன ?
2. தேசப் படத்தின் திசைகளை அறிவது எப்படி ?
3. ஆகாய மார்க்கத்திற்கும், இருப்புப்பாதை மார்க்கத்திற்கும் உள்ள திசை வேறுபாடுகளை விளக்குக.


14. இந்தியாவில் வீசும் காற்றுகள்

காற்று எப்பொழுதும் ஒரே திசையில் இருந்து வீசுவதில்லையென்று முன் ஒரு பாடத்தில் படித்தீர்கள் அல்லவா ? சில மாதங்களில் ஒரு திசையிலிருந்தும், வேறு சில மாதங்களில் வேறு திசையி

விருந்தும் காற்று வீசுகிறது. குறிப்பிட்ட சில மாதங்களில் வீசும் காற்று, **பருவக்காற்று** எனப்படும். நம் நாட்டில் **தென்மேற்குப்**



இந்தியா - வடகிழக்குப் பருவக்காற்று



இந்தியா - தென்மேற்குப் பருவக்காற்று

பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று என்னும் இரண்டு பருவக் காற்றுகள் வீசுகின்றன.

நமக்குக் கோடை காலமாக விளங்கும் **மே** முதல், **அக்டோபர்** வரையுள்ள மாதங்களில் தென்மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று **தென்மேற்குப் பருவக்காற்று** ஆகும். நமக்குக் குளிர்காலமாக விளங்கும் **நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி** மாதங்களில் வடகிழக்குத் திசையி விருந்து வீசும் காற்று **வடகிழக்குப் பருவக்காற்று** எனப்படும். இவ்விரண்டு பருவக்காற்றுகளும் எத்திசைகளிலிருந்து வீசுகின்றன என்பதைப் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். இக்காற்று களே நமது நாட்டுக்கு மழையைக் கொண்டு வருகின்றன. இவற்றால் எங்கெங்கு, எவ்வளவு மழை பெய்கிறது என்பதை அடுத்த பாடத்தில் படிக்கலாம்.

பயிற்சி

1. பருவக்காற்று என்றால் என்ன ?
2. தென் மேற்குப் பருவக்காற்று எப்போது வீசுகிறது ?
3. வட கிழக்குப் பருவக்காற்று வீசும் காலத்தைக் குறிப்பிடுக.

15. இந்தியாவில் பெய்யும் மழையின் அளவு

குளம், ஏரி, கடல் முதலிய நீர்நிலைகளிலிருந்து மேலே எழும் நீராவி, காற்றோடு கலந்து, வானத்தில் உயரச் செல்கிறது. அப்போது அது குளிர்ச்சியடைந்து மேகங்களாக மாறுகிறது. அம்மேகங்கள் குளிர்ந்த காற்றினால் தள்ளப்படும் போதும், மலைகளால் தடுக்கப்பட்டு

மேலும் உயரத்திற் சென்று மழையைப் பொழிகின்றன. அவற்றைப் பற்றி முன்னொரு பாடத்தில் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

நம் நாட்டிற்குத் தென்மேற்குப் பருவக் காற்று, வடகிழக்குப் பருவக் காற்று ஆகிய இரண்டும் மழையைக் கொடுக்கின்றன. **தென் மேற்குப் பருவக்காற்**றினால் ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் மேற்கு மலைத் தொடருக்கும் **அரபிக்** கடலுக்கும் நடுவில் உள்ள **மேற்குக் கடற்கரைச் சமவெளிப்** பகுதியிலும், கிழக்கு மலைத் தொடரின் வடபாகத்திலும், **வங்காளம், அஸ்ஸாம், கங்கைச் சமவெளியின் கிழக்குப்** பகுதியிலும், மத்திய பகுதியிலும் மழை அதிகமாகப் பெய்கிறது.

அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் **வட கிழக்குப் பருவக்காற்றினால்** இந்தியாவின் கிழக்குக் கரைப் பகுதிகள் மழையைப் பெறுகின்றன. இந்தக் காற்றினால் தென் மேற்குப் பருவக் காற்றினால் உண்டாகும் மழையைப் போலப் பெருமழை பெய்வதில்லை.

தென்மேற்குப் பருவக் காற்று இந்திய சமுத்திரத்திலிருந்து வீசுகிறது. அது அரபிக் கடலின் மூலம் நீராவியைக் கொண்டுவந்து மேகமாக மாற்றுகிறது. அம்மேகங்களை மேற்கு மலைத்தொடர்கள் தடை செய்வதால், மேற்கு மலைச்சரிவுகளில் மழை பெய்கிறது. இந்திய சமுத்திரத்தின் வழியாக வீசும் தென்மேற்குப் பருவக்காற்று, வங்காள விரிகுடாவின் மூலம் வீசும் போது நீராவியைக் கொண்டுவந்து மேகமாக மாற்றுகிறது. அம்மேகங்களை இமயமலைகள் தடுப்பதால் வங்காளம், அஸ்ஸாம், கங்கைச் சமவெளி முதலிய இடங்களில் மழை பெய்கிறது.

வடகிழக்குப் பருவக் காற்று நிலத்திலிருந்து வீசுகிறது. அது வங்காள விரிகுடா வழியாக வீசி, இந்தியாவின் கிழக்குக் கரைப் பகுதிக்கு மழையைத் தருகிறது. நீர்ப் பரப்பிலிருந்து வீசும் காற்றை விட, நிலப் பரப்பிலிருந்து வீசும் காற்றில் நீராவியின் அளவு மிகக் குறைவாக இருப்பதால் தென்மேற்குப் பருவக்காற்றினால் அதிக மழையும், வடகிழக்குப் பருவக் காற்றினால் குறைந்த மழையும் உண்டாகின்றன.

பஞ்சாப்பு, சிந்து ஆகிய இராச்சியங்களில் மழை மிகவும் குறைவாகப் பெய்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்து கொள்வோம். இவை தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய பருவக்காற்றுகள் வீசும் வழியில் அமைந்திருக்கவில்லை. தென்மேற்குப்

பருவக் காற்று அஸ்ஸாம் மலைகளால் தடுக்கப்பட்டுக் கங்கைச்சமவெளிகளில் மழையைப்பெய்து, பஞ்சாப்பை அடைவதற்குள் நீராவியை இழந்துவிடுவதால், இக் காற்றில் இங்கு மழை உண்டாவதில்லை. வடகிழக்குப் பருவக் காற்று நிலப் பகுதியிலிருந்து வீசும் வரண்ட காற்றுதலால், இதனால் இப் பகுதிகளில் மழை ஏற்படுவதில்லை. சிந்து இராச்சியத்திற்குக் கிழக்குப் பகுதியில் உள்ள மழையற்ற வரண்ட பகுதியே **தார் பாலைவன**மாக இருக்கிறது.

பயிற்சி

I. **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக:**


1. தென்மேற்குப் பருவக் காற்றால் மழையைப் பெறும் இடங்களை குறிப்பிடுக.
2. பஞ்சாப்பு, சிந்து இராச்சியங்களில் மழை மிகவும் குறைவாகப் பெய்வதற்குக் காரணம் யாது?
3. எந்தப் பருவக் காற்றினால் நம் நாட்டில் அதிக மழை பெய்கிறது? ஏன்?

II. **சரியா? தவறு?**


1. தென் மேற்குப் பருவக்காற்றால் மேற்கு மலைச் சரிவில் மழை அதிகம் பெய்கிறது.
2. வடகிழக்குப் பருவக்காற்று கடலிலிருந்து வீசுகிறது.
3. சிந்து இராஜ்யத்தின் மேற்கே தார்பாலைவனம் இருக்கிறது.
4. தென் மேற்குப் பருவக்காற்று அதிக மழையைக் கொடுக்கிறது.

16. இந்தியாவின் சீதோஷ்ண நிலை

மழை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகப் பெய்வதில்லை என்பதை நீங்கள் அறிந்தீர்கள். இதைப்போலவே சூரியனது உஷ்ணமும் எல்லா இடங்களிலும் ஒரே அளவாக இருப்பதில்லை.



இந்தியா—குளிர் கால வெப்ப அளவு



இந்தியா—கோடை கால வெப்ப அளவு

ஓரிடத்தின் உஷ்ண நிலை, அது அமைந்திருக்கும் இடத்தைப் பொறுத்து அதிகமாகவும், குறைவாகவும் இருக்கிறது. பொதுவாகப் பூமத்திய

ரேகையிலிருந்து வடக்கிலும் தெற்கிலும் போகப்போக வெப்பம் குறையும். அது போலவே ஓரிடத்திலிருந்து வானத்தை நோக்கி மேலே போகப்போக வெப்பம் குறையும். அம்மாதிரியே கடற்கரையிலிருந்து உள் நாட்டிற்குப் போகப்போகக் கோடையில் வெப்பம் அதிகமாகவும், குளிர்காலத்தில் குளிர் அதிகமாகவும் இருக்கும்.

சமவெளியில் அமைந்துள்ள இடங்கள் உஷ்ணமாயும், மலையின்மீது உள்ள இடங்கள் குளிர்ச்சியாயும் இருக்கின்றன. சமவெளியைவிட உயரமாக விளங்கும் மலைகளில் உஷ்ணம் குறைவாகவும், குளிர் அதிகமாகவும் இருக்கின்றது. ஆகையால்தான் கோடை காலத்தில் தனவந்தர்கள் மலைகளின்மேல் இருக்கும் ஊர்களுக்குச் செல்கின்றனர். சென்னை இராச்சியத்தில் உள்ள **உதகமண்டலமும்**, பம்பாய் இராச்சியத்தில் உள்ள **மஹாபலேஷ்வரமும்**, இமய மலைச் சரிவில் உள்ள **டார்ஜீலிங், சிம்லா** ஆகிய இடங்களும் மலைகளின்மீது அமைந்துள்ள கோடை வாசத்தலங்களாகும்.



டார்ஜிலிங் பட்டணத்தின் ஒரு காட்சி

பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள இடங்களில் உஷ்ணம் அதிகமாகவும் அதற்கு வடக்கிலும், தெற்கிலும் செல்லச் செல்ல உஷ்ணம் குறைவாகவும் இருக்கிறது. நம் நாட்டின் தென்பாகம் பூமத்திய ரேகைக்கு அருகில் இருப்பதால் இங்கு உஷ்ணம் அதிகமாக இருக்கிறது. எஸ்கிமோக்கள் வாழும் துந்திர வெளிகள் பூமத்திய ரேகையிலிருந்து அதிக தூரத்தில் இருப்பதால், அங்கு எப்பொழுதும் பனி நிறைந்து, குளிர் அதிகமாக இருக்கிறது.

மேலும் கடற்கரைக்கு அருகில் உள்ள இடங்கள் உள் நாட்டில் இருக்கும் இடங்களைவிட உஷ்ண நிலையில் குறைந்தவையாக இருக்கும். இதற்குக் கடலில் இருந்து வீசும் காற்று காரணமாக விளங்குகிறது. நம் நாட்டில் சென்னையைவிடத் திருச்சியில் கோடை காலத்தில் உஷ்ணம் அதிகமாக இருக்கிறது. ஏனெனில் சென்னை, கடற்கரையையடுத்து அமைந்திருக்கிறது. திருச்சி உள்நாட்டில் அமைந்திருக்கிறது.

இந்தியாவின் வடக்கில் உள்ள காஷ்மீரும், இமயமலைச் சரிவுகளில் உள்ள இடங்களும் கடல் மட்டத்தைவிட உயர்ந்த இடங்களாக

விளங்குவதால், அங்கு உஷ்ணம் குறைவாகவும், குளிர் அதிகமாகவும் இருக்கிறது.

இவ்வாறு ஓரிடத்தின் சீதோஷ்ண நிலைக்கு, அவ்விடத்திற்கும் பூமத்திய ரேகைக்கும் இடையில் உள்ள தூரமும், கடலுக்கும் அவ்விடத்திற்கும் இடையில் உள்ள தூரமும், கடல் மட்டத்திற்கு மேல் அவ்விடம் அமைந்துள்ள உயரமும் காரணங்களாக விளங்குகின்றன.

பயிற்சி

I. **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :**

1. தென் மேற்குப் பருவக்காற்றால் மழையைப் பெறும் இடங்களை எழுதுக.
2. பஞ்சாப்பு, சிந்து இராச்சியங்களில் மழை மிகவும் குறைவாகப் பெய்வதற்குக் காரணம் யாது?
3. எந்தப் பருவக்காற்றினால் நம் நாட்டில் அதிக மழை பெய்கிறது? ஏன்?

II. **சரியா? தவறா?**

1. தென் மேற்குப் பருவக்காற்றினால் மேற்கு மலைச்சரிவில் மழை அதிகம் பெய்கிறது.
2. வடகிழக்குப் பருவக்காற்று கடலிலிருந்து வீசுகிறது.
3. சிந்து இராச்சியத்தின் மேற்கே தார்பாலை வனம் இருக்கிறது.
4. தென் மேற்குப் பருவக்காற்று அதிக மழையைக் கொடுக்கிறது.

17. இமயமலைப் பிரதேசம்

இந்தியாவின் தேசப் படத்தைப் பார்த்து இமயமலை இருக்கும் இடத்தை அறிந்துகொள். இது நம் நாட்டின் வடக்கெல்லையாக அமைந்திருக்கிறது. கிழக்கு மேற்காகப் பரந்து காணப்படுகிறது. இம் மலையின்மீது எப்பொழுதும் பனி உறைந்திருக்கும். இமம் என்னும் சொல்லுக்குப் பனி என்பது பொருள். ஆலயம் என்றால் இருப்பிடம். எனவே பனியால் மூடப்பட்டுள்ள இம்மலையை இமாலயம் எனவும் கூறுகிறார்கள்.

உலகத்திலேயே மிகவும் பெரிய மலையாக விளங்கும் பல சிகரங்கள் இருக்கின்றன. அவற்றில் எவரெஸ்டு என்பது மிக உயரமானது. இதன் உச்சியைக் கண்டு பிடிக்கப் பலர் நெடுங்காலமாக முயன்று கடுமையான குளிரினாலும், பனியினாலும் தாக்கப்பட்டுத் தோல்வியுற்றனர். கடைசியில் டென்ஸிங்கு. ஹில்லரி என்பவர் மிக முயன்று இதன் உச்சியை அடைந்தனர். இமயமலையின் சரிவுகளில் அடர்த்தியான காடுகள் இருக்கின்றன.

அக்காடுகளில் கொடிய விலங்குகள் வசிக்கின்றன. இம்மலையின் மேற்குப் பகுதியில் பனிப்பாறைகள் இருக்கின்றன. கோடை காலத்தில் பனிக்கட்டி உருகி மலைகளுக்கு இடையேயுள்ள பள்ளத்தாக்குகள் வழியாகப் பாய்ந்து ஓடுகிறது. **சிந்து, கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா** ஆகிய நதிகள் இவ்வாறுதான் இங்கிருந்து உற்பத்தியாகின்றன.

இம்மலையின் கிழக்குப் பகுதியில் **டார்ஜீலிங்** என்னும் கோடை வாசத்தலம் இருக்கிறது. இது மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தது.




இமயமலையின் ஒரு தோற்றம்

இங்குச் செல்வதற்குக் குறுகிய இருப்புப் பாதையொன்று மலையின்மீது அமைந்திருக்கிறது. இப்பாதை செல்லும் வழியின் இருபுறங்களிலும் அடர்ந்த காடுகளும், குறுகிய பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன. இங்கு மக்கள் அதிகமாக வசிப்பதில்லை. இங்குள்ள மலைச்சரிவில் தேயிலை பயிரிடப்படுகிறது.

டார்ஜீலிங்கிற்கு அப்பால் மலையின்மேல் ஏறிச்செல்வது மிகவும் கடினமான காரியமாகும். வண்டிகள் செல்லக்கூடிய பாதைகள் கிடையா. இங்கு வசிக்கும் மக்கள் ஆடு, மாடுகளை மேய்த்தும், காடுகளைத்திருத்தி நிலத்தைப் பயிர் செய்தும் வாழ்கிறார்கள்.

சிம்லா என்னும் கோடை வாசத்தலம் இம்மலையின் மேற்குப் பகுதியில் இருக்கிறது.



பஞ்சாப்பு, உத்தரப் பிரதேசம், வங்காளம் ஆகிய இராச்சியங்களின் வடக்குப் பகுதிகள் இம்மலையின் சரிவுகளில் அமைந்திருக்கின்றன. இம்மலைப் பிரதேசத்தின் இடையில் திபெத்து என்னும் நாடு இருக்கிறது. இந்நாடு மிக உயர்ந்த பீடபூமிப் பிரதேசம். இங்கு வாழும் மக்கள் உழைப்பாளிகள். இந்நாட்டின் தலைநகரம் **லாஸா**. இங்கு இந்நாட்டின் தலைவரான **தலைலாமா** வசிக்கிறார். இந்நாட்டிலுள்ள **யாக்கு** என்னும் சடைமாடுகள் போக்கு வரவிற்குப் பயன்டுகின்றன.

இமயமலைப் பிரதேசத்தில் **நேபாளம், பூடான், காஷ்மீரம்** என்னும் நாடுகளும் இருக்கின்றன. நேபாள தேசத்து மக்களுக்குக் **கூர்க்கர்** என்பது பெயராகும். இவர்கள் உடல் வலிமையும், தைரியமும் உள்ளவர்கள். இவர்களிற் பலர் நம்நாட்டுச் சேனையில் சிறந்த போர் வீரர்களாக இருக்கின்றனர்.

பயிற்சி

I. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :

1. இமயமலை இருக்கும் இடம் எது? அது ஏன் இப்பெயரைப் பெற்றது?
2. எவரெஸ்டு என்பது என்ன?
3. இமயமலையிலிருந்து உற்பத்தியாகும் ஆறுகள் எவை?
4. டார்ஜீலிங்கின் தன்மையை எழுதுக.
5. இமயமலைப் பிரதேசத்தில் உள்ள நாடுகள் யாவை?

II. பொருத்தி எழுதுக :

1. இமயமலைச் சரிவுகளில்	பனிப்பாறைகள் உள்ளன.
2. இமயமலையின் கிழக்கில்	சிம்லா இருக்கிறது.
3. இமயமலையின் மேற்கில்	தேயிலை பயிரிடப்படுகிறது.
4. இமயமலையின் மேற்பாகத்தில்	டார்ஜீலிங் இருக்கிறது.

18. மேற்கு மலைத்தொடர் பிரதேசம்


தென்னிந்தியாவில் தட்சிண பீடபூமி இருக்கிறது. இப் பீடபூமிக்கு மேற்கில் மேற்கு மலைத்தொடர்களும், கிழக்கில் கிழக்கு மலைத் தொடர்களும், வடக்கில் விந்திய, சாத்பூரா மலைகளும் அமைந் திருக்கின்றன.

மேற்கு மலைத்தொடரைச் சேர்ந்த மலைகள் இந்தியாவின் மேற் குக் கரையோரமாகத் தொடர்ச்சியாக அமைந்திருக்கின்றன. தெற்கே செல்லச் செல்ல இவற்றின் உயரம் அதிகரிக் கிறது. இம்மலைகளில் இருந்து கோதாவரி, கிருஷ்ணு, காவிரி முதலிய நதிகள் உற்பத்தியாகி, கிழக்குத் திசையை நோக்கி ஓடுகின்றன. இம் மலைகள் மேற்குப்பக்கம் செங்குத்தாகவும் கிழக்குப்பக்கம் சரிவாகவும் உள்ளன. அரபிக்கடலில் இருந்து தென்மேற்குப் பருவக் காற்று வீசும்போது இவை அக்காற்றைத் தடுத்து மேற்குக்கடற் கரையை அடுத்துள்ள சமவெளியில் மழையைப் பெய்விக்கின்றன. இம்மலைகளின் மேற்குச்சரிவிலும் மழை அதிகமாய்ப் பெய்கிறது. ஆதலால் இம்மலைகளின் மேற்குச் சரிவில் காடுகள் அடர்ந்துள்ளன. இக்காடுகளில் **சந்தனம், தேக்கு, கருங்காலி** முதலிய மரவகைகள் காணப்படுகின்றன. இங்கு யானைகள் அதிகமாக வசிக்கின்றன.

மேற்கு மலைத்தொடரின் வடக்குப்பகுதி பம்பாய் இராச்சி யத்தில் இருக்கிறது. இம்மலையில் உள்ள குறுகலான **போர்காட், தால்காட்** என்னும் கணவாய்கள் வழியே பம்பாயிலிருந்து சென்னை, கல்கத்தா முதலிய இடங்களுக்குச் செல்லும் இருப்புப்பாதைகள் அமைந்திருக்கின்றன.


இம்மலைத் தொடரும் கிழக்கு மலைத் தொடரும் ஒன்று சேரும் இடத்தில் **நீலகிரி** மலை இருக்கிறது. இதன்மீது உள்ள உதகமண்டலம், குன்னூர் ஆகிய பட்டணங்கள் சிறந்த கோடை வாசத்தலங்களாக விளங்குகின்றன. நீலகிரி மலையில் நீர்வீழ்ச்சிகளும், ஏரிகளும், தேயிலைத் தோட்டங்களும், பசும்புல் நிறைந்த குன்றுகளும் நிறைந்து அழகாகத் தோன்றுகின்றன. உதகமண்டலம் செல்வதற்கு இருப்புப்பாதை யொன்று சமவெளிப் பகுதியிலிருந்து போடப்பட்டிருக்கிறது.

பாலக்காட்டுக் கணவாய் என்பது நீலகிரிக்குத் தெற்கில் இருக்கிறது. இது சுமார் இருபது மைல் அகலமுள்ளது. இதன் வழியே சென்னையிலிருந்து மேற்குக் கரையில் உள்ள இடங்களுக்குச் செல்லும் இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருக்கின்றது.



மேற்கு. மலைப் பிரதேசம்
சௌராஷ்டிரம்
நர்மதை
தபதி
சூரத்
நாஸிக்
பம்பாய்
ஹைதராபாத்
மத்திய பிரதேசம்
ரத்தினகிரி
கர்நூல்
ஆந்திரம்
மைசூர்
கோலார்
பெங்களூர்
மங்களூர்
மர்க்காரா
குடகு
நீலகிரி
உதகமண்டலம்
மலையாளம்
பாலக்காட்டு கணவாய்
கோழிக்கோடு
ஆனைமலை
பழனி மலை
கன்னியகுமரி
திருவனந்தபுரம்

நீலகிரியின் வடக்கில் குடகுநாடு இருக்கிறது. இங்கிருந்து தான் காவிரி உற்பத்தியாகின்றது.



நீலகிரியில் ஒரு காட்சி

நீலகிரிக்குத் தெற்கே மேற்கு மலைத்தொடர் **ஆனைமலை** எனக் கூறப்படுகிறது. இதற்குத் தெற்கே உள்ள மலைப்பகுதி **ஏலமலை** என்றும், கிழக்கே யுள்ள பகுதி **பழனிமலை** என்றும் கூறப்படுகின்றன. ஆனைமலை யில் யானைகள் அதிகம். வைகை, தாமிரபரணி என்னும் நதிகள் இம் மலையில் உற்பத்தியாகின் றன. **கோடைக்கானல்** என்ற கோடை வாசத்தலம் பழனி மலையில் இருக்கிறது.

மேற்கு மலைச்சரிவுகளில் **தேயிலையும்,** **காப்பியும்** பயிரிடப் படுகின்றன. தேயிலை விளைவிற்கு ஏற்ற அதிக உஷ்ணமும், அதிக மழையும் பொருந்திய சீதோஷ்ணநிலை இச்சரிவுகளில் அமைந்திருப் பதால், இங்குத் தேயிலை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தேயிலையைப் பக்குவம் செய்தும், காப்பிச் செடிகளின் விதைகளிலிருந்து காப்பிக் கொட்டைகளை எடுத்தும் பல இடங்களுக்கும் அனுப்புகிறார்கள். ஆனைமலையில் இரப்பரும், ஏலமலையின் சரிவுகளில் ஏலக்காயும், மிளகும் பயிரிடப் படுகின்றன. நீலகிரி மலையில் **யூகலிப்டஸ்** என்னும் மரங்கள் வளர் கின்றன. நீலகிரி மலையில் வாழும் மக்கள் **படகர், தொதவர், இருளர்** என்னும் மூன்று இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நமது நாட்டுப் பழங் குடிகளின் சந்ததியார் என்று கூறப்படுகிறது.

பயிற்சி

I. **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :**

1. மேற்கு மலைத்தொடர்கள் எங்கு இருக்கின்றன?
2. நீலகிரி மலையைப்பற்றி உனக்குத் தெரிந்தவற்றை யெழுதுக.
3. காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகள் உற்பத்தியாகும் இடங்களை எழுதுக.
4. பாலக்காட்டுக் கணவாய் எங்கு இருக்கிறது?
5. மேற்கு மலைத் தொடரில் விளையும் பொருள்களைக் குறிப்பிடு.

II. **பொருத்தி எழுதுக :**

குன்னூர்	ஆனைமலை
கோடைக்கானல்	குடகு
காவிரி	ஏலமலை
இரப்பர்	நீலகிரிமலை

III. **கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :**


(1) மேற்கு மலைத் தொடரும், கிழக்கு மலைத் தொடரும் சேரும் இடத்தில்—— இருக்கிறது.

(2) ஆனை மலைக்குத் தெற்கில்——————கிழக்கில்———இருக்கின்றன.

(3) ஏலமலையில்— ——, ———பயிராகின்றன.

19. காஷ்மீரமும், ஜீலம் நதியும்

காஷ்மீர நாடு இந்தியாவின் வடக்கில் உள்ள இமயமலைகளின் மேற்குப் பாகத்தில் அமைந்திருக்கிறது; இங்குப் பல மலைத் தொடர்கள் இருக்கின்றன. **சிந்து, ஜீலம்** என்னும் இரண்டு பெரிய நதிகள் இந்நாட்டில் ஓடுகின்றன. ஜீலம் நதி இரண்டு மலைகளுக்கு இடையே உள்ள பள்ளத்தாக்கின் வழியாக ஓடுகிறது. இப்பள்ளத் தாக்கு **ஜீலம் நதிப் பள்ளத்தாக்கு** எனப்படும். சிந்து நதி பாயும் பகுதியில் ஒரு பள்ளத்தாக்கு அமைந்திருக்கிறது. இதற்குச் **சிந்து நதிப் பள்ளத்தாக்கு** என்பது பெயராகும். இது ஜீலம் நதிப் பள்ளத்தாக்குக்கு வடக்கில் அமைந்திருக்கிறது. ஆதலால் இங்குக் குளிர் அதிகம். இது குளிர் மிகுந்த பகுதியாக இருப்பதால் இங்கு மக்கள் அதிகமாக வசிக்கவில்லை.




காஷ்மீரில் கம்பளம் நெய்தல்

ஜீலம் நதிப் பள்ளத்தாக்கு மக்கள் வசிப்பதற்கேற்ற வசதிகளைப் பெற்றிருக்கிறது. ஆதலால் இங்கு அதிக அளவில் மக்கள் வசிக்கிறார்கள். இப்பள்ளத்தாக்கு அழகில் சிறந்து விளங்குகிறது.

காஷ்மீர நாடு கடல் மட்டத்தை விட உயரமாக இருப்பதால் இங்குக் கோடையில் வெயிலின் கொடுமை தெரிவதில்லை. குளிர் காலத்தில் குளிர் அதிகம். இங்குச் சிறிதளவு மழை பெய்கிறது. இங்குள்ள பள்ளத்தாக்குகளில் **கோதுமை, பார்லி** முதலிய

தானியங்களும், **ஆப்பிள், மாதுளை, திராட்சை** முதலிய பழவகைகளும் பயிரிடப்படுகின்றன. மலைச்சரிவுகளில் வசிக்கும் மக்கள் **ஆடுகளை** வளர்த்து, அவற்றின் உரோமத்தால் அழகான சால்வைகளை நெய்கின்றனர். இந்நாட்டு **பட்டு** நெசவிலும் சிறப்புற்று விளங்குகிறது.

காஷ்மீரத்தின் தலைநகராகிய **ஸ்ரீநகர்** ஜீலம் நதிக்கரையில் அமைந்திருக்கிறது. இந்நகரத்தின் சுற்றுப்புறங்களில் பழத் தோட்டங்களும், பலநிறப் பூக்களைக்கொண்ட பூஞ்சோலைகளும் அதிகம். ஸ்ரீநகருக்கு மேற்கே **ஊலார்** என்னும் ஏரி இயற்கை யழகிற்கு



ஊலார் ஏரியில் உள்ள படகு வீடுகள்

இருப்பிடமாக விளங்குகின்றது. இந்நகரின் அழகிய காட்சிகளைக் கண்டு களிப்பதற்காக மக்கள் பலர் இங்கு வருகின்றனர். இங்கு உள்ள ஏரியிலும், நதியிலும் மக்கள் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்குப் பயன்படும் படகு வீடுகள் காணப்படும். அவை காஷ்மீரைக் காணச் செல்லும் பிரயாணிகளுக்கு வாடகைக்கு விடப்படும். இதுவன்றிப் பெரிய தெப்பங்கள் அமைத்து, அவற்றில் அழகிய பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இம்மாதிரியான மிதக்கும் பூந்தோட்டங்களும் ஊலார் ஏரியில் காணப்படும்.

பயிற்சி

1. காஷ்மீரில் உள்ள பள்ளத்தாக்குகள் யாவை?
2. எந்தப் பள்ளத்தில் மக்கள் அதிகம்? ஏன்?

3. காஷ்மீரத்தில் பயிரிடப்படும் பொருள்கள் எவை ?
4. ஸ்ரீநகரின் சிறப்பை எழுதுக.
5. காஷ்மீரத்தில் நடைபெறும் தொழில்கள் யாவை?

20. சிந்து நதிப் பள்ளத்தாக்கு

சிந்துநதி இமயமலையில் உற்பத்தியாகித் தென்மேற்காக ஓடி அரபிக்கடலில் விழுகிறது என்பதை நீங்கள் முன்பே அறிந்திருக்கிறீர்கள். இதன் உபநதிகளாகிய **ஜீலம், சீனுப், ரவி, பீயாஸ், சட்லெஜ்** என்ற ஐந்து ஆறுகளும் பாயும் பகுதி **பஞ்சாப்பு** எனப்படும்.

பஞ்சாபில் மழை மிகவும் குறைவாகப் பெய்கிறது. **மேற்குப் பஞ்சாப்பு பாகிஸ்தானிலும், கிழக்குப் பஞ்சாப்பு இந்தியக் குடியரசிலும்** அடங்கி யிருக்கின்றன. பஞ்சாப்பில் நதிகளே நீர்ப்பாசன வசதிக்கு உதவுகின்றன. இந்த நதிகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டு, கால்வாய்கள் மூலம் தண்ணீர் வயல்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இங்குக் **கோதுமையும், கரும்பும்** அதிகமாகப் பயிரிடப்படுகின்றன.



பஞ்சாப்பில் வசிக்கும் மக்கள் உடல் வலிமையும், உழைப்பும் உள்ளவர்கள். இங்கு இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் என்னும் பல மதங்களைச் சேர்ந்த மக்கள் வசிக்கிறார்கள். **லாகூர்** என்னும் நகரம் மேற்குப் பஞ்சாப்பிற்குத் தலைநகரமாகவும், **சண்டிகார்** என்னும் நகரம் கிழக்குப் பஞ்சாப்பிற்குத் தலைநகரமாகவும் விளங்குகின்றன. சீக்கியர்களுக்குப் புண்ணியத்தலமாக விளங்கும் **அமிர்தஸரஸ்** கிழக்குப் பஞ்சாப்பில் உள்ளது.

சிந்து நதியின் கீழ்ப்பகுதி பாயும் இடம் சிந்து இராச்சியமாகும். இதுவும் பாகிஸ்தானைச் சேர்ந்தது. இங்கு மழை மிகவும் குறைவாகப் பெய்வதால் சிந்து நதியிலிருந்து கால்வாய்களின் மூலம் நீரைக்கொண்டு

போய்ப் பயிர் செய்யப்படுகிறது. **ஸுக்கூர்** என்னும் இடத்தில் சிந்து நதியின் குறுக்கே பெரிய அணை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இது மிகப் பெரியது. இந்த அணையிலிருந்து தண்ணீர், கால்வாய்கள் மூலம் வயல்களுக்குப் பாய்ச்சப்பட்டுக் கோதுமையும், பருத்தியும், பயிரிடப் படுகின்றன. சிந்து நதிப் பள்ளத்தாக்கில் தான் பண்டைக் காலத்துப் பட்டணங்கள் புதையுண்டிருக்கும் **மொஹஞ்சோதாரோ** இருக்கிறது.

சிந்து நதியின் முகத்துவாரத்திற்கு அருகில் அமைந்துள்ள **கராச்சி** சிறந்த துறைமுகமாகவும், பாகிஸ்தானின் தலைநகரமாகவும் விளங்குகிறது. இது விமான நிலையமாகவும் இருக்கிறது. இத்துறை முகத்தின் வழியாகச் சிந்து நதிச் சமவெளியின் விளைபொருள்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

பயிற்சி

I. **விடை எழுதுக :**

1. பஞ்சாப்பு நாட்டின் விளை பொருள்கள் யாவை?
2. பஞ்சாப்பில் வசிக்கும் மக்களைப் பற்றி உனக்குத் தெரிந்தவற்றை எழுதுக.
3. சிந்து இராச்சியத்தின் விளைபொருள் யாவை? அவை எவ்வாறு பயிரிடப்படுகின்றன?
4. லாகூர், சண்டிகார், அமிர்தஸரஸ், கராச்சி-இவற்றைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

II. **சரியா ? தவறு ?**


1. பஞ்சாப்பில் மழை மிகவும் குறைவாகப் பெய்கிறது.
2. லாகூர் கிழக்குப் பஞ்சாப்பின் தலைநகரம்.
3. பஞ்சாப்பில் ஸுக்கூர் அணைக்கட்டு இருக்கிறது.
4. கராச்சி சிறந்த துறைமுகம்.

21. கங்கைச் சமவெளி

கங்கை நதி இமயமலையில் தோன்றி வட இந்தியாவில் பாய்கிறது. அந்நதியும், அதன் உபநதிகளும் அடித்துக்கொண்டு வரும் வண்டல் மண் கங்கைச் சமவெளியைச் செழிப்பாக்குகின்றது. இப்பகுதியில் மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். **உத்தரப் பிரதேசம், பீஹார், வங்காளம்** ஆகிய மூன்று இராச்சியங்களும் இச்சமவெளியில் இருக்கின்றன.

கங்கை நதி சமவெளியை அடையும் இடத்தில் **ஹரித்துவாரம்** என்னும் பட்டணம் இந்துக்களின் புண்ணியத் தலமாக இருக்கிறது. இந்த இடத்திலிருந்து கங்கை தென் கிழக்காகத் திரும்பிப் பாய்கிறது.

கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் மழை குறைவாத லால் இங்குக் கால்வாய்கள் மூலம் நீர்ப்பாய்ச்சிக் குளிர்காலத்தில் **கோதுமை**யும் கோடை காலத்தில் **நெல்**லும் பயிரிடப்படுகின் றன. இப்பகுதியில் கங்கையின் உபநதியாகிய **யமுனை**யின் கரை யில் **டில்லி** அமைந்திருக்கிறது. இது இந்தியாவின் தலைநகரமா கும். **ஆக்ரா** என்னும் நகரம் டில்லிக்குச் சிறிது கிழக்கில் யமுனை நதிக்கரையில் அமைந் திருக்கிறது. இங்கு உலக அதி சயங்களில் ஒன்றாக விளங்கும் **தாஜ்மஹால்** என்ற அழகிய கட்ட டம் இருக்கிறது.



கங்கைச் சமவெளியின் நடுப்பகுதியில் **அலஹாபாத்** என்னும் இடத்தில் கங்கையும் யமுனையும் கலக்கின்றன. இந்த இடம் **பிரயாகை** எனவும் கூறப்படும். இந்நகரத்திற்குக் கிழக்கில் இந்துக்களுக்குப் புண்ணியத்தலமாக விளங்கும் **காசி** இருக்கிறது. காசிக்கு அடுத்தாற் போல, பீஹார் இராச்சியத்தின் தலைநகராகிய **பாட்னா** கங்கையின் கரையில் அமைந்திருக்கிறது. இதுவே பழங்காலத்தில் மகத இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது. இப்பகுதியில் மழை அதிக மாய்ப்பெய்வதால் **நெல்லும், கரும்பும்** அதிகமாகப் பயிரிடப்படுகின்றன.

கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதியில் கங்கையின் டெல்ட்டாப் பிரதேசம் அமைந்திருக்கிறது. இப்பகுதியில் **பிரம்மபுத்திரா நதி** கங்கையுடன் கலக்கின்றது. இங்கு மழை அதிகமாகப் பெய்வதால் நெல்லும், **சண**லும் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன. இப்பகுதியில் மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். இங்கு அமைந்துள்ள இராச்சியம் **வங்காளம்** ஆகும். அது **கிழக்கு வங்காளம், மேற்கு வங்காளம்** என்று இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு வங்காளம் பாகிஸ்தா னுக்கும், மேற்கு வங்காளம் இந்தியக் குடியரசிற்கும் உரியவை.

மேற்குவங்காளத்தின் தலைநகரமாக விளங்கும் கல்கத்தா, **ஹூக்ளி** எனப்படும் கங்கையின் கிளை நதியின் கரையில் அமைந்திருக்கிறது. **டாக்கா** என்னும் நகரம் கிழக்கு வங்காளத்தின் தலைநகரமாக விளங்கு கிறது. கல்கத்தா நகரம் ஹூக்ளி நதி மூலமாக வரும் கப்பல்கள் தங் கும்படியான பெரிய துறைமுகமாகவும், சிறந்த வியாபாரத் தலமாக வும் விளங்குகிறது. வங்காளத்தின் முக்கிய விளைபொருள் **சணல்.**

அதைக் கொண்டு கோணிப் பைகளும், கித்தான்களும் தயாரிக்கும் சணல் தொழிற்சாலைகள் பல இங்கு இருக்கின்றன. இங்குக் காகிதத் தொழிற்சாலைகளும் உண்டு. இப்பிரதேசத்தின் வடபாகத்தில் இமய மலைச்சரிவிலும், கிழக்கில் உள்ள **அஸ்ஸாம்** இராச்சியத்தைச் சேர்ந்த மலைகளிலும் **தேயிலை** மிகுதியாகப் பயிர் செய்யப்படுகிறது. இத்தேயிலை கல்கத்தா துறைமுகத்தில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பயிற்சி

I. **விடை எழுதுக :**

1. கங்கைச் சமவெளியில் அடங்கியுள்ள இராச்சியங்கள் எவை ?
2. கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் உள்ள முக்கிய நகரங்களின் பெயர்களை எழுதுக.
3. கங்கைச் சமவெளியின் கீழ்ப் பகுதியின் தன்மையை எழுதுக.
4. சணல் எங்கு அதிகமாய்ப் பயிரிடப்படுகிறது ?

II. **பொருத்தி எழுதுக :—**

1. தாஜ்மஹால்	ஹூக்ளி நதிக்கரை
2. பாட்னு	யமுனை நதிக்கரை
3. கல்கத்தா	கிழக்கு வங்காளம்
4. டாக்கா	ஆக்ரா
5. டில்லி	பீஹார் இராச்சியம்

22. பிரம்மபுத்திரா நதிப் பள்ளத்தாக்கு

இந்நதி இமயமலையில் உற்பத்தியாகி வெகுதூரம் மலைப் பிரதேசத்திலேயே கிழக்கு முகமாக ஓடிக் கடைசியில் இந்தியாவின் வடகிழக்கில் உள்ள மலை இடுக்குகள் வழியாக **அஸ்ஸாம், வங்காளம்** ஆகிய இராச்சியங்களில் பாய்கிறது. பிறகு கங்கையோடு கலக்கிறது. பிரம்மபுத்திரா நதி ஓடும் பள்ளத்தாக்கு சுமார் ஐந்நூறு மைல் நீளம் இருக்கிறது. ஆனால் அதன் அகலம் ஐம்பது மைல் தான் இருக்கிறது. இருபுறங்களிலும் மலைச்சரிவுகள் உள்ளன.

அஸ்ஸாம் இராச்சியத்தில் இந்நதியின் இருபுறங்களிலும் மலைகள் இருப்பதால், இங்கு இதன் பள்ளத்தாக்கு மிகவும் குறுகலாக அமைந்திருக்கிறது. இப்பள்ளத்தாக்கில் சதுப்பு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகையால் இங்கு மக்கள் அதிகமாக வசிப்பதில்லை. நெல் வயல்களும், கிராமங்களும் இங்கு இருக்கின்றன.

பிரம்மபுத்திரா நதியின் இருபுறங்களிலும் உள்ள மலைச்சரிவுகளில் **தேயிலை** பயிரிடப்படுகிறது. இங்கு உள்ள தேயிலைத் தோட்டங்களில் மக்கள் பலர் வேலைசெய்து பிழைக்கின்றனர். அஸ்ஸாமிலுள்ள **திப்ருகார்** தேயிலை விளைவிற்குப் பெயர் பெற்ற இடமாகும். இந்நதியில் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதனால் நதிக்கரையில் உள்ள ஊர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த வருடத்தில் இந்நதியில் பெரிய வெள்ளம் ஏற்பட்டுப் பல இடங்கள் பாழ்பட்டன. திப்ருகார் நகரத்திலும் அதனை அடுத்த இடங்களிலும் உள்ள தேயிலைத் தோட்டங்களும் அழிந்துவிட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது பொருள்களையும், வீடுகளையும் இழந்து துன்புற்றனர்.


பிரம்மபுத்திரா கடைசியில் **கிழக்கு** வங்காளத்தில் கங்கையுடன் கலந்து கடலில் விழுகிறது.

பயிற்சி

1. பிரம்மபுத்திரா நதி எந்த இராச்சியங்களின் வழியாகப் பாய்கிறது?
2. இந்நதியின் இயல்பைப் பற்றி எழுதுக.
3. அஸ்ஸாமின் முக்கிய விளைபொருள் யாது?

23. காவிரி நதிப் பள்ளத்தாக்கு

இதுவரை வடஇந்திய நதிகள் பாயும் இடங்களைப் பற்றிப் படித்தோம். இனிச் சில தென்னிந்திய நதிகளைப் பற்றியும், அவை பாயும் இடங்களைப் பற்றியும் படிப்போம்:




காவிரி நதிப் பிரதேசம்

காவிரி நதி மேற்கு மலையில் உள்ள குடகு நாட்டில் உற்பத்தியாகி, அங்கிருந்து மைசூர் பீட பூமியில் பாய்கிறது. மைசூருக்கு அருகில் இந் நதியின் குறுக்கே பெரிய அணை ஒன்று கட்டப் பட்டிருக்கிறது. இதற்குக் **கண்ணம்பாடி** அணை என்பது பெயர். இந்த அணை யால் ஏற்பட்டுள்ள நீர்த் தேக்கத்துக்குக் **கிருஷ்ண**

ராஜ சாகரம் என்பது பெயர். இங்கிருந்து கால்வாய்கள் மூலமாகத் தண்ணீர் நிலங்களுக்குப் பாய்ச்சப்படுகிறது.


இதற்கு அப்பால் **சிவசமுத்திரம்** என்னும் இடத்தில் இந்நதியில் ஒரு நீர்வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இது **சிவசமுத்திர நீர்வீழ்ச்சி** என்று கூறப்படுகிறது. இந்நீர் வீழ்ச்சியிலிருந்து மின் சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, மைசூர் இராச்சியத்தில் உள்ள பல பாகங்களிலும் இயந்திரங்களை ஓட்டுவதற்கும், விளக்கு எரிப்பதற்கும் உபயோகிக்கப்படுகிறது.



சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி

காவிரியின் சமவெளிப் பிரதேசத்தில் **மேட்டூர்** என்னும் இடத்தில் வேறொரு பெரிய அணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணையிலிருந்து தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களுக்கு நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் கால்வாய்கள் மூலம் அனுப்பப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் **சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சை, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, சித்தூர், செங்கற்பட்டு** ஆகிய ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுகிறது.

காவிரி நதியின் சமவெளிப் பிரதேசம் மிகவும் செழிப்பாக அமைந்திருக்கிறது. இப்பகுதியில் பல உப நதிகள் காவிரி நதியோடு கலக்கின்றன. **சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப் பள்ளி ஜில்லாக்கள்** இப்பகுதியில் இருக்கின்றன. இங்குக்காவிரி நதியின் தண்ணீரைப் பாய்ச்சி நெல் பயிரிடப்படுகிறது. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரியிலிருந்து **கொள்ளிடம்** என்னும் கிளை நதி பிரிகின்றது.



கிருஷ்ணராஜசாகரம்

வைணவர்களுக்குச் சிறந்த தலமாக விளங்கும் **ஸ்ரீரங்கம்** என்பது இவ்விரண்டு ஆறுகளுக்கும் இடையில் இருக்கிறது.

காவிரியின் டெல்ட்டாப்பகுதியில் **தஞ்சாவூர் ஜில்லா** அமைந்திருக்கிறது. இப்பகுதி மிகவும் செழிப்புடையதாக இருக்கிறது. தென்னிந்தியாவில் இப்பகுதியில் மக்கள் அதிகமாக வசிக்கிருர்கள். பசுமையான வயல்களும், செழுமையான தோப்புகளும், வாழை, கரும்பு ஆகியவை விளையும் தோட்டங்களும், குளம், வாய்க்கால் முதலிய நீர் நிலைகளும் இந்த ஜில்லாவின் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. இங்கு நெல் அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. தஞ்சை ஜில்லாவைத் **தென்னிந்தியாவின்நெற்களஞ்சியம்** எனப் புகழ்ந்து கூறுகிருர்கள். இந்த ஜில்லாவின் தலைநகராக விளங்கும் **தஞ்சாவூர்** பழமையான நகரமாகும். இது சோழ மன்னர்களுக்குத் தலைநகரமாக விளங்கியது. இங்கு இராசராச சோழனல் கட்டப்பட்ட **பிரகதீஸ்வரர் கோவில்** என்ற சிவன் கோயில் ஒன்று இருக்கிறது. தஞ்சாவூரைத் தவிர **நாகப்பட்டினம், மாயூரம், கும்பகோணம், சீர்காழி** முதலிய சிறந்த ஊர்களும் இப்பகுதியில் இருக்கின்றன.

பயிற்சி

I. **பின்வரும் வினுக்களுக்கு விடையெழுதுக :**

1. காவிரி நதியில் உள்ள அணைக்கட்டுகள் யாவை?
2. சிவசமுத்திர நீர்வீழ்ச்சி எங்கு இருக்கிறது?
3. மேட்டூர் அணை எவ்வாறு பயன்படுகிறது?
4. காவிரியின் டெல்ட்டாப் பகுதியைப் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.
5. தஞ்சை ஜில்லாவில் உள்ள முக்கியமான ஊர்களை எழுதுக.

II. **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மைசூருக்கு அருகில் காவிரி நதியில் உள்ள அணைக்கட்டு———— என்பதாகும்.
2. காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளுக்கு இடையில்———— இருக்கிறது.
3. தஞ்சாவூரில்————ஆலயம் இருக்கிறது.
4. காவிரி நதி————உற்பத்தியாகிறது.

24. வேறு சில நதிப் பிரதேசங்கள்

(1) வடபெண்ணை, தென்பெண்ணைப் பள்ளத்தாக்குகள்

வடபெண்ணை, தென்பெண்ணை ஆகிய நதிகள் மைசூர் பீடபூமியில் உற்பத்தியாகி, கர்நாடகச் சமவெளி வழியாகப் பாய்ந்து, வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. இந்நதிகளில் மழைக்காலத்தில் மட்டுமே தண்ணீர் ஓடுகிறது. வடபெண்ணை பாய்கின்ற பகுதியில் நெல் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் உள்ள நெல்லூர் ஜில்லா

அரிசி விளைவிற்குப் பெயர்பெற்றது. இங்குப் பால் அதிகம் தரும் பசுமாடுகள் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன.

தென்பெண்ணையாறு தென் ஆர்க்காடு ஜில்லாவில் பாய்கிறது. **பாலாறு** என்பது வடஆர்க்காடு, செங்கற்பட்டு, ஜில்லாக்களில் பாய்ந்து ஓடுகிறது. இப்பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் இந்த ஆறுகளின் நீரைப் பெரிய ஏரிகளில் தேக்கி வைத்து, நீர்ப்பாசனத்திற்குப் பயன் படுத்துகிறார்கள். தென் ஆர்க்காடு ஜில்லாவில் **நிலக்கடலை**யும் **கரும்பு**ம் அதிக அளவில் விளைகின்றன. இந்த ஜில்லாக்களைப் பற்றிப் பின்னால் விரிவாகப் படிப்போம்.

(2) கோதாவரி, கிருஷ்ணா பள்ளத்தாக்குகள்

இந்நதிகள் மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகிக் கிழக்கு நோக்கி ஓடி வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. இவற்றின் டெல்ட்டாப் பிரதேசங்கள் செழிப்பு வாய்ந்தவை. இப்பகுதியில் **கரும்பு, புகையிலை, நெல்** முதலியவை பயிரிடப்படுகின்றன. **தவளேஸ்வரம்** என்னும் இடத்தில் கோதாவரியிலும், **விஜயவாடா** என்னும் இடத்தில் கிருஷ்ணாவிலும் அணைக்கட்டுகள் உள்ளன.


மேல் கோதாவரி. கீழ்க்கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா ஆகிய ஜில்லாக்கள் இந்நதிகளின் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கின்றன. இப்பகுதியில் வசிக்கும் மக்கள் **ஆந்திரர்கள்**. அவர்கள் **தெலுங்கு** மொழியைப் பேசுகிறார்கள். விவசாயம் இவர்களின் முக்கியத் தொழிலாக விளங்குகிறது.

[3) வைகை, தாமிரபரணி பாயும் பகுதிகள்

மேற்கு மலைத்தொடரைச் சேர்ந்த **ஏலக்காய் மலை**யில் உற்பத்தியாகும் **வைகையாறு** மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களின் வழியாகப் பாய்ந்து வங்காளா விரிகுடாவில் கலக்கிறது. இவ்வாற்றில் எப்பொழுதும் தண்ணீர் இராது. கோடைகாலத்தில் இது வரண்டு இருக்கும். இப்பகுதியில் மழையும் குறைவாகப் பெய்கிறது. திருவாங்கூரில் மேற்கு மலைத்தொடரில்உற்பத்தியாகி, மேற்கு நோக்கி ஓடும் பெரியாறு எனப்படும் ஆற்றின் குறுக்கே அணைகட்டி, அதன் நீரை வைகையில் பாயும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இது **பெரியாறு திட்டம்** என்று கூறப்படும். இதனால் நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டு, **நெல், வாழை** முதலியவை பயிரிடப்படுகின்றன. இந்நதியின் கரையில் அமைந்துள்ள **மதுரை** சிறந்த நகரமாகும். இங்கு உள்ள **மீனாட்சியம்மன் கோயில்** தென் இந்தியாவில் சிறந்து விளங்கும் ஆலயம் ஆகும்.

தாமிரபரணியாறு ஏலக்காய் மலையின் ஒரு பகுதியில் உள்ள **அகஸ்தியமலை**யில் உற்பத்தியாகித் திருநெல்வேலி ஜில்லா வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் சேருகிறது. இந்த ஆற்றில் **பாபநாசம்** என்னும் இடத்தில் **நீர் வீழ்ச்சி** ஏற்பட்டிருக்கிறது. இங்கிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதன் உபநதியாகிய **சித்ரா** என்பதில் குற்றாலம் என்னும் இடத்தில் ஒரு நீர் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் **குற்றால நீர் வீழ்ச்சி**




குற்றால நீர் வீழ்ச்சி
Copy Right :—Department of Archaeology, India.

என்பது பெயர். இதில் நீராடும் பொருட்டுப் பலர் இங்கு வருகிறார்கள். குற்றாலத்திற்கு அருகில் உள்ள தென் காசியிலிருந்து மேற்கு மலைத் தொடருக்கு அப்பால் உள்ள இடங்களுக்குச் செல்லும் இருப்புப்பாதை **ஆரியன்காவுக் கணவாய்** வழியாக அமைக்கப்பட்டிருக்கிறது. **திருநெல்வேலி** என்னும் நகரம் தாமிரபரணி நதிக்கரையில் அமைந்திருக்கிறது

(4) நர்மதை, தபதி, மஹாநதி பாயும் பகுதிகள்

நர்மதை என்னும் நதி விந்திய, சாத்பூரா மலைகளுக்கு இடையில் மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் கலக்கின்றது. **தபதிநதி** சாத்பூரா மலைக்குத் தெற்கில் மேற்கு நோக்கி ஓடுகிறது. இதுவும் அரபிக்கடலில் கலக்கிறது.



இவை இரண்டின் பெரும் பாகம் **மத்திய பிரதேச** இராச்சியத்தில் அமைந்திருக்கிறது. இவற்றின் கரையோரங்களில் **நெல்** பயிரிடப்படுகிறது. கோதுமை, கேழ்வரகு, சோளம் முதலியவை பயிராகின்றன. **நாகபுரி** என்பது மத்திய பிரதேசத்தின் தலைநகரம். இதன் வடக்கே இரும்பு, மாங்கனீயம் முதலியன கிடைக்கின்றன. இவ்விடங்களில் மக்கள் குறைவாக வசிக்கின்றனர். **சூரத்து** எனப்படும் வியாபாரத்தலம் தபதி நதியின் முகத்துவாரத்தில் இருக்கிறது.

மஹாநதி தட்சிண பீடபூமியின் வடகிழக்கில் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் சேருகிறது. இதற்குப் பல உபநதிகள் உண்டு. இதன் டெல்ட்டாப் பிரதேசம் மிகவும் செழிப்புவாய்ந்தது. இங்கு **நெல்** பயிரிடப்படுகிறது. **திணைவகையும், எண்ணெய் வித்துக்களும், வெள்ளைப் பூண்டு** முதலியவைகளும் பயிராகின்றன. இந்நதியின் முகத்துவாரத்தில் **கட்டாக்கு** என்னும் நகரமும், **பூரி** என்ற புண்ணியத் தலமும் அமைந்திருக்கின்றன. இந்நதி ஒரிஸ்ஸா இராச்சியத்திற்கு நீர் வசதி யளிக்கிறது. ஒரிஸ்ஸா இராச்சியத்தில் **இரும்பு, நிலக்கரி, மாங்கனீயம்** ஆகிய உலோகங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.

பயிற்சி

I. விடை எழுதுக:


1. தென்பெண்ணை, பாலாறு என்னும் நதிகள் பாயும் இடங்களை யெழுதுக.
2. கோதாவரி, கிருஷ்ணா நதிகள் எங்கு உற்பத்தியாகின்றன? இவை பாயும் இடங்கள் யாவை?
3. பெரியாறு திட்டம் என்பது என்ன?
4. பாபநாசம் நீர்வீழ்ச்சி, குற்றாலம் நீர்வீழ்ச்சி, ஆரியன்காவுக் கணவாய் - இவை யாவை?
5. மேற்கு முகமாக ஓடும் நதிகள் யாவை?
6. மஹாநதி பாயும் பகுதியைப் பற்றி நீ அறிந்தவற்றை யெழுதுக.

II. **சரியா, தவறு? தவறாக இருந்தால் திருத்துக :—**

1. தென்பெண்ணை வட ஆர்க்காடு ஜில்லாவில் பாய்கிறது.
2. கோதாவரியில் விஜயவாடா என்னும் இடத்தில் அணைக்கட்டப்பட்டிருக்கிறது.
3. மதுரை வைகை நதிக் கரையில் இருக்கிறது.
4. தாமிரபரணி ஆனைமலையில் உற்பத்தியாகிறது.
5. கட்டாக்கு மஹாநதி முகத்துவாரத்தில் இருக்கிறது.

25. பம்பாயின் பருத்திப் பிரதேசம்

கிழக்கு மலைத்தொடர், மேற்கு மலைத்தொடர் இவற்றிற்கு இடையில் உள்ள **தட்சிண பீடபூமியின் மேற்கு, வடமேற்கு ஆகிய பகுதிகள்** பருத்தி விளைவதற்கு ஏற்ற **கரிசல்மண்** நிலங்களாக உள்ளன. மேலும் மேற்கு மலைத்தொடர்கள் தென்மேற்குப் பருவகாற்றைத் தடுத்து விடுவதால், இப்பகுதிகளில் மழை குறைவாகப் பெய்கிறது. இங்கு உஷ்ணம் அதிகமாக இருக்கிறது. குறைந்த மழையும், அதிக உஷ்ணமும் பொருந்திய இச்சீதோஷ்ண நிலையும், கரிசல் மண்ணும் பருத்திச் செடிகள் பயிராவதற்குத் தகுந்தவை யாதலால், இங்குப் **பருத்தி** அதிகமாகப் பயிரிடப்படுகிறது.



பம்பாயிலுள்ள பருத்தி ஆலையின் ஒரு காட்சி

இங்கு விளையும் பருத்தி, பம்பாய் இராச்சியத்தில் உள்ள **ஷோலாப்பூர் தார்வார், ஆமதாபாது, பம்பாய்** ஆகிய நகரங்களுக்கு அனுப்பப்படுகிறது. இவ்விடங்களில் பருத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. பம்பாய் நகரம் மேற்குக் கரையில் ஒரு தீவின் மீது அமைந்திருக்கிறது என்பதையும், இது சிறந்த துறைமுகம் என்பதையும் நீங்கள் முன்பே அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? இந்நகரம் சிறந்த வியாபாரத் தலமாக விளங்குகிறது. இந்நகரில் அழகிய பெரிய கட்டடங்களும், பல தொழிற்சாலைகளும் நிறைந்திருக்கின்றன. இங்கிருந்து சென்னை, கல்கத்தா, டில்லி முதலிய நகரங்களுக்கு மேற்கு மலைத்தொடரில் உள்ள கணவாய்கள் வழியே இருப்புப் பாதைகள் செல்லுகின்றன.



72
74
76
22
20
18
16
சௌராஷ்டிரம்
நர்மதை
சூரத்
தபதி
நாஸிக்
பம்பாய்
பூனா
மத்திய
பிரதேசம்
தக்ஷிண
பீடபூமி
கிருஷ்ணை நதி
பம்பாய்
பருத்திப் பிரதேசம்
500 அடிக்கு மேல்
5000 அடிக்கு மேல்

பருத்தி, பருத்தித் துணிகள் ஆகியவை இங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

பம்பாய்க்குத் தென் கிழக்கில் உள்ள **பூனா** என்ற நகரம் இராணுவத்தலமாக விளங்குகிறது. பம்பாய் இராச்சியத்தில் **மஹாராஷ்டிரம், குஜராத்தி, கன்னடம்** ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் வசிக்கிறார்கள்.

பயிற்சி

1. பருத்தி எங்கு அதிகமாக விளைகிறது?
2. பருத்தித் தொழிற்சாலைகள் உள்ள இடங்கள் யாவை?
3. பம்பாய் நகரத்தின் சிறப்பை எழுதுக.
4. பூனா எங்கு இருக்கிறது?

26. தட்சிண பீடபூமியின் தென்பாகமும், மைசூரும்


தட்சிண பீடபூமியின் தென்பாகம் சிறிது குறுகலாக இருக்கிறது. இப்பகுதியில் மைசூர் இராச்சியமும், **கொடை ஜில்லாக்கள்** எனப்படும் **பல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, கர்நூல்** ஆகிய ஜில்லாக்களும் அடங்கியிருக்கின்றன. இந்த ஜில்லாக்கள் ஆங்கிலேயருக்கு ஹைதராபாத் நிஜாமால் கொடுக்கப்பட்டவை. ஆகையால் இப்பெயர் பெற்றன. இவற்றில் பெல்லாரி ஜில்லாவில் மூன்று தாலுக்காக்கள் தவிர மற்றப்பாகம் மைசூரில் சேர்ந்துவிட்டது.



கொடை ஜில்லாக்கள், மழை குறைந்த வரண்ட நிலத்தை உடையனவாக இருக்கின்றன. இப்பகுதியில் **பருத்தி** அதிகமாகப் பயிரிடப்படுகிறது. இங்குக் கிடைக்கும் பருத்தி, பம்பாய் இராச்சியத்தில் உள்ள பருத்தித் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றது. இந்த ஜில்லாக்களில் வசிக்கும் மக்கள் குன்றுகளுக்கு இடையில் உள்ள பள்ளத்தாக்குகளில் புன்செய்த் தானியங்களைப் பயிரிடுகிறார்கள். துங்கபத்திராவில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு இந்த ஜில்லாக்களின் நீர்ப்பாசனத்திற்கு மிகவும் உபயோகப்படுகிறது. இங்குள்ள வரண்ட புல் வெளிகளில் ஆடுகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. அவற்றின் உரோமத்தால் கம்பள நெசவு நடைபெறுகிறது.



மைசூர் இராச்சியம் தட்சிணப் பீடபூமியின் உயர்ந்த பகுதியில் இருப்பதால் இங்குச் சமவெளியைவிடக் குளிர் அதிகமாக இருக்கிறது. இங்கு மழையும் குறைவாகப் பெய்கிறது. காவிரி நதி பாயும் பகுதிகளில் **நெல்லும், கரும்பும்** பயிரிடப் படுகின்றன. இவையன்றிக் **கம்பு, கேழ்வரகு, சோளம்** முதலியவை பயிரிடப்படுகின்றன. இந்த இராச்சியத்தின் மேற்கிலும், தென்மேற்கிலும் உள்ள அடர்ந்த காடுகளில் **தேக்கு, சந்தனம்** முதலிய சிறந்த மரங்கள் இருக்கின்றன. இக்காடுகளில் யானைகளும் வசிக்கின்றன.



மைசூரில் உள்ள அழகிய அரண்மனை

இந்த இராச்சியத்தின் மலைச்சரிவுகளில் **காப்பித்** தோட்டங்கள் இருக்கின்றன. இங்குக் கிடைக்கும் காப்பிக் கொட்டை **மங்களூர்** என்னும் மேற்குக் கடற்கரைத் துறைமுகத்தின் மூலமாக ஏற்றுமதியாகின்றது.

மைசூர் இராச்சியத்தில் உள்ள **கோலார்** என்னும் இடத்தில் **தங்கம்** வெட்டியெடுக்கப்படுகிறது. சிவசமுத்திர நீர்வீழ்ச்சியிலிருந்து எடுக்கப்படும் மின்சாரம் மைசூர் இராச்சியத்தின் பல தொழில்களுக்கும் உபயோகமாக இருக்கிறது. இங்கு உள்ள **பத்திராவதி**யில் **இரும்புத் தொழிற்சாலை** இருக்கிறது. இங்குச் சந்தனக் கட்டையிலிருந்து தைலம் இறக்குவது, சோப்புச் செய்வது, பீங்கான், கண்ணாடிச் சாமான்கள் செய்வது, காகிதம் செய்வது போன்ற பல தொழில்கள் நடைபெறுகின்றன.


இந்த இராச்சியத்தில் உள்ள **மைசூர்** நகரத்தில் பல அழகிய அரண்மனைகள் இருக்கின்றன. இங்கு இந்நாட்டின் இராசப் பிரமுகர் வசிக்கின்றார். **பெங்களூர்** என்னும் நகரம் மைசூருக்குக் கிழக்கில் அமைந்திருக்கிறது. இங்குப் பட்டு நெசவு சிறப்புற்று விளங்குகிறது.

பயிற்சி

1. கோடை ஜில்லாக்கள் யாவை?
2. கோடை ஜில்லாக்களின் சீதோஷ்ண நிலை எவ்வாறு இருக்கிறது?
3. மைசூர் இராச்சியத்தின் விளைபொருள்கள் யாவை?
4. மங்களூர், கோலார், பத்திராவதி, பெங்களூர் - இவற்றைப் பற்றிக் குறிப்பெழுதுக.

27. தென்கன்னடமும் மேற்குக் கடற்கரைப் பிரதேசமும்

மேற்கு மலைத்தொடருக்கும் அரபிக்கடலுக்கும் இடையில் குறுகிய சமவெளி இருக்கிறது. இதன் வடபாகம் பம்பாய் இராச்சியத்தைச் சேர்ந்தது. அதற்குக் **கொங்கணச் சமவெளி** என்பது பெயர். தென்பகுதிக்கு **மலையாளக்கரை** என்பது பெயர். **தென்கன்னடம் மலையாளம், திருவாங்கூர் - கொச்சி** இணைப்பு இராச்சியம் ஆகியவை தென்பகுதியில் அடங்கியிருக்கின்றன.



காயல்கள்

இச்சமவெளியில் தென்மேற்குப் பருவக்காற்று அதிக மழையைக் கொடுப்பதால் இங்குள்ள நிலப்பகுதி செழுமையாக இருக்கிறது. கடற்கரையை அடுத்து மணல் மேடுகள் இருக்கின்றன. மணல் மேடுகளை அடுத்துச் சம நிலங்கள் உள்ளன. இவற்றிற்கு இடையில் உள்ளவை **உப்பங்கழிகள்.** அவை **காயல்கள்** எனப்படும். இவை போக்குவரவுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

இங்குச் சமவெளிப் பகுதியில் **நெல்லும்,** மலைச்சரிவுகளில் **இரப்பர், மிளகு, பாக்கு, பலா** முதலியனவும் பயிரிடப்படுகின்றன. கடற்கரையை அடுத்த மேடுகளில் தென்னை மரங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இங்கு வசிக்கும் மக்கள் தேங்காய் நாரினால் **கயிறு திரித்தல்**

கொப்பரையிலிருந்து **தேங்காய் நெய் தயாரித்தல், மீன்பிடித்தல், படகு ஓட்டுதல்** முதலிய தொழில்களைச் செய்து வருகிறார்கள்.

இங்குள்ள காடுகளில் **தேக்கு, நூக்கு** மரங்கள் அடர்ந்திருக்கின்றன. இவற்றில் **யானைகளும்** அதிகமாக வசிக்கின்றன. இங்கு வசிப்பவர்கள் யானைகளைப் பிடித்துப் பழக்கித் தேக்கு மரங்களைத் தூக்குவதற்கும் அடுக்குவதற்கும் உபயோகிக்கிறார்கள்.



படகு ஓட்டுதல்

தென் கன்னடம் ஜில்லாவில் பல சிற்றாறுகள் ஓடுகின்றன. கடற்கரையை அடுத்துள்ள இடங்களுக்குச் செல்லச் சாலைகள் இல்லை. ஆகையால் படகுகளின் மூலமாக அவ்விடங்களுக்குச் செல்ல வேண்டும்.

இதன் தலைநகரம் **மங்களூர்** என்பதாகும். இது மேற்குக் கரையில் உள்ள ஒரு துறைமுகம். மைசூரில் கிடைக்கும் காப்பிக்கொட்டை இங்கிருந்து ஏற்றுமதி யாகின்றது. இந்நகரத்தில் இப்பகுதியில் கிடைக்கும் ஒருவித மண்ணிலிருந்து **ஓடுகள்** செய்யும் தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்றன. இந்த ஜில்லாவில் கன்னட மொழி பேசும் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

தென்கன்னடத்தை யடுத்து **மலையாள ஜில்லா** அமைந்திருக்கிறது. **கோழிக்கோடு** என்பது இந்த ஜில்லாவின் தலைநகரம் ஆகும். இதுவும் மேற்குக் கரையில் உள்ள ஒரு துறைமுகம். இங்கிருந்து கயிறுகள், கொப்பரைத் தேங்காய்கள் முதலியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கோழிக்கோட்டிற்குத் தெற்கில் **பாலக்காட்டுக் கணவாய்** இருக்கிறது. இதன் வழியாகச் சென்னைக்குச் செல்லும் இருப்புப்பாதை அமைந்திருக்கிறது. தென் கன்னடம், மலையாளம் ஜில்லாக்கள் சென்னை இராச்சியத்தைச் சேர்ந்தவை.

மேற்குக் கடற்கரையின் தென்பாகத்தில் திருவாங்கூர்-கொச்சி இணைப்பு இராச்சியம் இருக்கின்றது. நமது நாட்டில் முன்னேற்றம்

அடைந்துள்ள இராச்சியங்களுள் இது ஒன்று. இங்கு வாழும் மக்களில் நூற்றுக்கு ஐம்பது பேருக்கு மேல் கல்வி கற்றவர்கள். இங்குப் பெரும் பாலோர் மலையாளம் பேசுகின்றனர். அடுத்தபடி தமிழ் முககியம். கொங்கணி, கன்னடம் ஆகிய பாஷைகளும் பேசப்படுகின்றன. இங்குக் கடற்கரையில் வசிக்கும் மக்கள் மீன் பிடிக்கிறார்கள். மணல் மேடுகளில் வாழ்பவர் தேங்காய் நார் கயிறு திரித்தல், தேங்காய் நெய் பிழிதல், முதலிய தொழில்கள் செய்கிறார்கள். சமநிலத்தில் பயிர்த் தொழிலும், மலைப் பிரதேசத்தில் மரம் வெட்டுவதும் நடைபெறுகின்றன. இந்த இராச்சியத்திலுள்ள கொச்சி ஒரு சிறந்த துறைமுகம் ஆகும். மேற்குக் கரையில் கிடைக்கும் பொருள்கள் இத்துறைமுகத்தின் மூலமாக ஏற்றுமதியாகின்றன. திருவனந்தபுரம் என்னும் நகரம் திருவாங்கூரின் தலைநகரமாக இருக்கிறது. திருவாங்கூர்-கொச்சியின் இராஜப் பிரமுகர் இந்நகரில் வசிக்கின்றார். இங்கிருந்து சென்னைக்குச் செல்லும் இருப்புப் பாதை **ஆரியன்காவுக் கணவாய்** வழியாகச் செல்லுகிறது.

மலையாளம், திருவாங்கூர்-கொச்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மலையாள மொழியைப் பேசுகிறார்கள். இப்பகுதிகள் **கேரளம்** எனவும் கூறப்படுகின்றன.

பயிற்சி

I. பதில் எழுதுக :

1. மேற்குக் கரைச் சமவெளியில் தென்பகுதியில் உள்ள இராச்சியங்கள் எவை ?
2. இச்சமவெளியைப் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.
3. மங்களூரின் சிறப்பை எழுதுக.
4. மேற்குக் கரையில் உள்ள துறைமுகங்கள் யாவை? அவற்றிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களை எழுதுக.
5. இப்பகுதியில் காணப்படும் கணவாய்கள் யாவை ?

II. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க :


1. தென்கன்னடம் ஜில்லாவின் தலைநகரம்————
2. கோழிக்கோட்டிற்குத் தெற்கில்————இருக்கிறது.
3. மலையாள மொழி பேசப்படும் பகுதிகள்————எனக் கூறப்படுகின்றன.
4. திருவனந்தபுரத்திலிருந்து————வழியாகச் சென்னைக்குச் செல்லும் இருப்புப்பாதை அமைந்திருக்கிறது.

28. வட சர்க்கார்ப் பிரதேசம்

கிழக்கு மலைத்தொடர்களுக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் உள்ள பகுதி கிழக்குக்கரைச் சமவெளியாகும். மேற்குக் கரைச் சமவெளியைப் போன்று குறுகலாக இராமல் இச்சமவெளி அகலமாக இருக்கிறது.

இச்சமவெளியின் வடகிழக்கில் கடற்கரையை யடுத்துள்ள பகுதி **வட சர்க்கார்** எனப்படும். இங்குக் கோதாவரி, கிருஷ்ணா என்னும் நதிகளின் டெல்ட்டாப் பிரதேசங்கள் இருக்கின்றன. இங்கு இந்நதிகளில் **அணைகட்டி** நீர்த்தேக்கி நிலங்களுக்குப் பாய்ச்சிச் சாகுபடி செய்கிறார்கள். **விசாகப்பட்டினம், கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர்** ஆகிய ஜில்லாக்கள் வடசர்க்கார்ப் பிரதேசத்தில் இருக்கின்றன. **விசாகப் பட்டினம்** என்பது விசாகப்பட்டினம் ஜில்லாவின் தலைநகரம். கிழக்குக் கோதாவரி ஜில்லாவின் தலைநகரம் **காக்கிநாடா**. மேற்குக் கோதாவரி ஜில்லாவின் தலைநகரம் **ஏலூரு**.






விஜயவாடா அருகில் கிருஷ்ணா நதியில் கட்டப்பட்டுள்ள அணை.

கிருஷ்ணு ஜில்லாவின் தலைநகரம் **மசூலிப்பட்டினம்**. குண்டூர் ஜில்லாவின் தலைநகரம் **குண்டூர்**. கோதாவரி, கிருஷ்ணு நதிகளின் டெல்ட்டாப் பிரதேசங்கள் செழுமை மிகுந்தவை. இங்கு **நெல், கரும்பு, புகையிலை** முதலிய நன்செய்ப் பயிர்கள் சாகுபடியாகின்றன. இவையன்றித் தினை வகைகளும், எண்ணெய் வித்துக்களும் நிரம்பப் பயிராகின்றன. கிருஷ்ணுவில் **விஜயவாடா** என்னும் இடத்திலும், கோதாவரியில் **தவளேஸ்வரம்** என்னும் இடத்திலும் அணைக்கட்டுகள் இருப்பதாக முன்பு ஒரு பாடத்தில் அறிந்தோம்.

விஜயவாடா பல இருப்புப்பாதைகள் சந்திக்கும் இடமாக இருக்கிறது. இங்குக் கிருஷ்ணு நதியின்மீது ஒரு பெரிய இரயில் பாலம் அமைந்திருக்கிறது. **இராஜமகேந்திரம்** என்னும் நகரத்தில் பல தொழிற்சாலைகள் உள்ளன. இங்குக் காகிதத் தொழிற்சாலை ஒன்று இருக்கின்றது. இது கோதாவரி நதியின் வடகரையில் அமைந்திருக்கிறது. **காக்கிநாடா** என்பதும் ஒரு துறைமுகம்.

காக்கிநாடாவிற்கு வடக்கில் உள்ள **விசாகப்பட்டினம்** என்ற துறைமுகத்தில் கப்பல் கட்டும் தொழில் நடைபெறுகிறது. இந்த ஜில்லாக்கள் ஆந்திர இராச்சியத்தைச் சேர்ந்தவை.

இங்கு வசிக்கும் மக்கள் **தெலுங்கு** மொழியைப் பேசுகிறார்கள். இவர்கள் **ஆந்திரர்கள்**



விசாகப்பட்டினம் துறைமுகம்

பயிற்சி

1. மேற்குக் கரைச் சமவெளிக்கும், கிழக்குக் கரைச் சமவெளிக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?
2. வடசர்க்கார் பிரதேசத்தில் பாயும் நதிகள் யாவை?
3. இப்பிரதேசத்தில் அடங்கியுள்ள ஜில்லாக்களை எழுதுக.
4. வடசர்க்கார்ப் பிரதேசத்தில் எங்கெங்கு அணைக்கட்டுகள் இருக்கின்றன?
5. சிறு குறிப்பெழுதுக: காக்கிநாடா, இராஜமகேந்திரம், விஜயவாடா, விசாகப்பட்டினம், இராமபாதசாகரம்.

29. கர்நாடகச் சமவெளி

கிழக்குக் கரைச் சமவெளியின் நடுவில் **நெல்லூர், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, சித்தூர்** என்னும் ஜில்லாக்கள் அடங்கிய பகுதி **கர்நாடகச் சமவெளி** ஆகும். இங்கு **வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு** என்னும் ஆறுகள் பாய்கின்றன. ந்த ஜில்லாக்களில் நெல்லூரும் சித்தூரும் ஆந்திர இராச்சியத்தைச் சேர்ந்தவை.

இச்சமவெளியில் **அக்டோபர், நவம்பர், டிசம்பர்** மாதங்களில் வடகிழக்குப் பருவக் காற்றினால் மழை பெய்கிறது. கோடை காலத்தில் தென்மேற்குப் பருவக் காற்றினால் மிகக் குறைவான மழையே பெய்கிறது. இங்குள்ள ஆறுகளில் எப்போதும் தண்ணீர் வருவதில்லை. ஆகையால் இவற்றின் தண்ணீர் ஏரிகளில் தேக்கி வைக்கப்பட்டு நிலங்களுக்குப் பாய்ச்சப்படுகின்றது. இப்பகுதியில் பெரும்பாலான இடங்களில் ஏரிகளைக் கொண்டு நீர்ப்பாசனம் நடைபெறுகிறது.



வடபெண்ணையாறு நெல்லூர் ஜில்லாவில் பாய்கிறது. இங்கு **நெல்** அதிகமாகப் பயிரிடப்படுகிறது. நீர்வளம் இல்லாத பகுதிகளில் **நிலக்கடலை, கம்பு, கேழ்வரகு, எள்ளு, சோளம்** முதலிய புன்செய்த் தானியங்கள் பயிர் செய்யப்படுகின்றன. இப்பகுதியில் வசிப்பவர்கள் சிறந்த உழைப்பாளிகளாக இருக்கிறார்கள். பயிர்த்தொழில் இவர்களது முக்கியத் தொழிலாக விளங்குகிறது.

இச்சமவெளியில் ஓடும் மற்றொரு ஆறாகிய பாலாறு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் பாய்கிறது. இதன் கரையருகில் **செங்கற்பட்டு** என்னும் நகரம் இருக்கிறது. இது இருப்புப்பாதை சந்திப்பு நிலையமாக விளங்குகிறது. இங்கிருந்து **காஞ்சீபுரம்** என்னும் புண்ணியத் தலத்திற்குச் செல்லும் இருப்புப்பாதை பிரிகின்றது. செங்கற்பட்டிற்கு அருகில் உள்ள **மஹாபலிபுரம்** சிற்பக்கலைக்குச் சிறந்த இடமாக இருக்

கிறது. **பஞ்சபாண்டவர் இரதங்கள்** என்னும் கற்கோவில்கள் இங்கு இருக்கின்றன.

திருத்தணி, திருப்பதி, திருவண்ணமலை, சிதம்பரம் ஆகிய புண்ணியத்தலங்களும், **வேலூர், சித்தூர், செஞ்சி, ஆர்க்காடு, விழுப்புரம், கூடலூர்** முதலிய சிறந்த இடங்களும் இச்சமவெளியில் இருக்கின்றன. இப்பிரதேசத்தில் பாயும் மற்ருெரு ஆறு **தென் பெண்ணை.** இது தென்ஞர்க்காடு ஜில்லாவில் பாய்கிறது. பொதுவாக ஆற்றுப் பாய்ச்சல் உள்ள இடங்களில் **நெல்** பயிரிடப்படுகிறது. மற்ற இடங்களிலும் ஏரிகள், கிணறுகள் முதலியவற்றிலிருந்து நீர் பாய்ச்சி நெல்லும், கேழ்வரகு, கம்பு முதலிய புன்செய்த் தானியங்களும் பயிரிடப்படுகின்றன. வடஆர்க்காடு, சித்தூர் ஜில்லாக்களில் **பழத் தோட்டங்கள்** அதிகம்.

தென்ஞர்க்காடு ஜில்லாவில் நிலக்கடலை மிகுதியாக விளைகிறது. இது கூடலூர், சென்னை ஆகிய துறைமுகங்கள் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஜில்லாவில் உள்ள **நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி** கிடைக்கிறது. கர்நாடகச் சமவெளியில் வாழும் மக்களின் முக்கியத் தொழில் விவசாயம். அதற்கு அடுத்தபடி நெசவுத் தொழில் நடைபெறுகிறது. இவையன்றிச் சில குடிசைத் தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன.

பயிற்சி

I. பதில் எழுதுக :

1. கர்நாடகச் சமவெளியில் அடங்கியுள்ள ஜில்லாக்கள் எவை ?
2. இச்சமவெளியில் பயிராகும் பொருள்களை எழுதுக.
3. இப்பகுதியில் உள்ள சிறந்த புண்ணியத்தலங்கள் யாவை ?
4. இப்பகுதியில் எவ்வாறு பயிர்த் தொழில் நடைபெறுகிறது ?

II. சரியா? தவரு?

1. கர்நாடகச் சமவெளியில் பாலாறு பாய்கிறது.
2. வடபெண்ணையாற்றுப் பகுதி வளம் குறைந்தது.
3. செங்கற்பட்டு பாலாற்றின் கரைக்கருகில் இருக்கிறது.
4. கர்நாடகச் சமவெளியில் கோடையில் அதிக மழை பெய்கிறது.

30. சென்னை நகரமும், அதன் துறைமுகமும்

இந்நகரத்தில் சென்னை அரசாங்கத்தின் அலுவலகங்கள் இருக்கின்றன. இந்த இராச்சியத்தின் கவர்னரும், மந்திரிகளும், உயர் தர அதிகாரிகளும் இந்நகரில் வசிக்கின்றனர்.



எழும்பூர் புகைவண்டி நிலையம்

இங்கு அழகிய நீண்ட சாலைகளும், சிறந்த கட்டடங்களும், பார்ப்பதற்குரிய இடங்கள் பலவும் இருக்கின்றன.

கடற்கரையோரத்தில் கட்டப்பட்ட **ஸெயிண்டு ஜார்ஜ் கோட்டை** இருக்கிறது. இப்பொழுது இக்கோட்டையில் அரசாங்க அலுவலகங்களும், மந்திரிகளின் அலுவலகங்களும் இருக்கின்றன. இதற்கு வடக்கில் சென்னையின் **உயர்நீதி மன்றம்** எனப்படும் **ஹைகோர்ட்டு** இருக்கிறது. இக்கட்டடத்தின் வடகிழக்குப் பகுதியில் **கலங்கரை விளக்கம்** அமைக்கப் பட்டிருக்கிறது.

இந்நகரில் உள்ள **மிருகக் காட்சிச்சாலை, பொருட்காட்சிச்சாலை, கன்னிமேரா நூல் நிலையம், மூர்மார்க்கெட், ஜெனரல் ஆஸ்பத்திரி, எழும்பூர் புகை வண்டி நிலையம், சென்ட்ரல் புகை வண்டி நிலையம், பல்கலைக்கழகக் கட்டடங்கள், மெரீனு பீச்சு, ரிப்பன் கட்டடம்** ஆகியவைகள் கண்டு களித்தற்குரிய இடங்கள் ஆகும்.

கூவம் என்னும் ஆறு இந்நகரின் இடையே ஓடுகிறது. இந்நகரின் தென்பகுதியில் **அடையாறு** நதி ஓடுகிறது. இதன் பல பாகங்களுக்கும் செல்வதற்கு மின்சார ரயில் வண்டிகளும், சென்னை **அரசாங்கத்தாரால்** விடப்படும் பஸ்களும் உள்ளன.

சென்னைத் துறைமுகம் இயற்கையானது அன்று. இங்கு அதிக பணச் செலவில் கடலை ஆழமாக்கிப் பெரிய கப்பல்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகளுடன் செயற்கைத் துறைமுகம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இத்துறைமுகத்தின் மூலம் **தோல், நிலக்கடலை** முதலியவை

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பல நாடுகளிலிருந்தும் சென்னைத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்கள் நமக்கு வேண்டிய இயந்திர சாமான்கள், மண்ணெண்ணெய், பருத்தித்துணிகள் முதலிய



மெரீனா கடற்கரை

பொருள்களை இறக்குமதி செய்கின்றன. இத்துறைமுகத்தின் மூலமாகச் சென்னையில் வியாபாரம் வளர்ச்சி யடைகிறது.

பயிற்சி


1. சென்னை எங்கு இருக்கிறது?
2. ஸெயிண்டு ஜார்ஜ் கோட்டையைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுதுக.
3. சென்னை நகரின் சிறந்த இடங்களை எழுதுக.
4. சென்னைத் துறைமுகத்தைப் பற்றி எழுதுக.
5. சென்னைத் துறைமுகத்தின் ஏற்றுமதிப் பொருள்களும், இறக்குமதிப் பொருள்களும் யாவை?

31. மதுரைச் சமவெளி

காவிரியாற்றின் டெல்ட்டாப் பிரதேசத்திற்குத் தெற்கில் உள்ள சமவெளி மதுரைச் சமவெளியாகும். **மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி** என்னும் ஜில்லாக்கள் இச்சமவெளியில் அடங்கியிருக்கின்றன. இங்கு **வைகை, தாமிரபரணி** என்ற ஆறுகள் ஓடுகின்றன. இங்கு மழை குறைவாகப் பெய்கிறது. வைகை, தாமிரபரணி ஆறுகளில் போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே, மேற்குமலைத் தொடரில் உற்பத்தியாகி ஓடும் பெரியாற்றின் குறுக்கே அணைகட்டி, மலையைக் குடைந்து, அதன் நீரை

வைகையில் கலக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இத்தண்ணீர் மதுரை ஜில்லாவில் பாசனத்திற்குப் பெரிதும் உபயோகப்படுகிறது.

தாமிரபரணி நதியில் பல அணைகள் கட்டப்பட்டு நீர்ப் பாசன வசதி செய்யப் பட்டுள்ளது. அன்றியும் தாமிரபரணியின் உபநதியான **மணிமுத்தாற்**றில் புதிதாக ஓர் அணைகட்டப் பட்டுள்ளது. பாபநாசம் நீர் வீழ்ச்சியின் உதவியால் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இச்சமவெளியில் நீர் வசதியுள்ள இடங்களில் **நெல், கரும்பு, வாழை** என்னும் நன்செய்ப் பயிர்களும் நீர் வசதியற்ற இடங்களில் **நிலக்கடலை, சோளம், மிளகாய்** முதலிய புன்செய்ப் பயிர்களும் கரிசல் மண் பொருந்திய இடங்களில் **பருத்தி**யும் பயிரிடப்படுகின்றன.



பாபநாசம் அணைக்கட்டு.

இச்சமவெளியில் உள்ள மதுரை நகரம் மதுரை ஜில்லாவின் தலைநகரம் ஆகும். இது மிகவும் பழமையான நகரம் ஆகும். இங்குப் பருத்தித்தொழிற்சாலைகள் இருக்கின்றன. **மீனாட்சியம்மன் கோவில்** என்ற புகழ்பெற்ற ஆலயம் இந்நகரில் இருக்கிறது. இங்கு நெசவுத் தொழிலும் சாயம்போடும் தொழிலும், நடைபெறுகின்றன. இங்குள்ள **திருமலைநாயக்கர் மஹாலும்**, மாரியம்மன் **தெப்பக்குளமும்** காண்பதற்குரிய நல்லிடங்களாகும். மதுரையிலிருந்து இராமேஸ்வரத்திற்கும், தனுஷ்கோடிக்கும், தூத்துக்குடிக்கும், திருவனந்தபுரத்துக்கும் இருப்புப் பாதைகள் செல்கின்றன.

இராமேஸ்வரம் இராமநாதபுரத்திற்கு அருகில் ஒரு தீவில் இருக்கிறது. இது இந்துக்களுக்குச் சிறந்த புண்ணியத்தலமாகும். **தனுஷ்கோடி**யிலிருந்து இலங்கைக்கு அடுத்தடுத்துக் கப்பல்கள் செல்லுகின்றன.

தூத்துக்குடி என்னும் துறைமுகம் இச்சமவெளியில் இருக்கிறது. இங்கிருந்து மதுரைச் சமவெளியில் கிடைக்கும் **பருத்தி** ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மதுரை ஜில்லாவில் உள்ள திண்டுக்கல்லில் சுருட்டு செய்யப்படு கின்றது. பழனி மலையில் **வாழைத்** தோட்டங்களும், கோடைக்கான லில் **திராட்சைப்** பழத்தோட்டங் களும் இருக்கின்றன. திருநெல் வேலி ஜில்லாவில் **பனைவெல்லம்** காய்ச்சப்படுகிறது.



இராமேஸ்வரம் தீவில் அமைந் திருப்பதால், அங்குச் செல்லும் இருப்புப்பாதை பாம்பன் என் னும் இடத்தில் கட்டப்பட்டுள்ள இரயில் பாலத்தின்மேல் அமைக் கப்பட்டிருக்கிறது. இப்பாலம் கப்பல்கள் வரும்போது இரண் டாகப் பிரிந்து மேலே உயர்ந்து வழிவிடுகிறது. இரயில் வண்டி கள் வரும்போது கீழே தாழ்ந்து ஒன்ருகச் சேர்ந்து, அவை செல் வதற்கு அனுகூலமாக இருக் கிறது.

பயிற்சி

I. பதில் எழுதுக :

1. மதுரைச் சமவெளியில் அடங்கியிருக்கும் ஜில்லாக்கள் எவை?
2. இச்சமவெளியில் பயிராகும் பொருள்கள் யாவை?
3. மதுரையின் சிறப்பை எழுதுக.
4. மதுரைச் சமவெளியில் நடைபெறும் தொழில்களைக் குறிப்பிடுக.
5. பாம்பன் பாலம் எங்கு இருக்கிறது? அதன் அமைப்பைப்பற்றி எழுதுக.


II. பொருத்துக :

1. மதுரை	பனைவெல்லம் காய்ச்சுதல்
2. தூத்துக்குடி	சுருட்டுகள் செய்தல்
3. திண்டுக்கல்	சாயம் போடுதல்
4. திருநெல்வேலி	உப்பு காய்ச்சுதல்

---

32. இலங்கை

இந்தியாவின் தெற்கில் அமைந்துள்ள தீவு **இலங்கை** எனப்படும். இத்தீவின் நடுவில் மலைகளும், சுற்றிலும் சமவெளிகளும் இருக்கின்றன.



இது தென் மேற்குப் பருவக் காற்று வடகிழக்குப் பருவக் காற்று ஆகியவற்றால் கோடை காலத்திலும், குளிர் காலத்திலும் அதிக மழையைப் பெறுகிறது. இதனால் இது பூமத்திய ரேகைக்கு அருகில் இருந்தும் இங்கு உஷ்ணம் அதிகமாக இருப்பதில்லை.

இங்குள்ள மலைகளின்மேல் மரங்கள் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. இங்கு வசிக்கும் மக்கள் காடுகளை அழித்து மலைச்சரிவுகளில் **தேயிலை, இரப்பர்** ஆகியவற்றை உற்பத்தி செய்கிறார்கள். இங்குள்ள தேயிலைத் தோட்டங்களிலும் இரப்பர் தோட்டங்களிலும் நம் நாட்டைச் சேர்ந்த மக்கள் பலர் வேலை செய்கின்றனர். இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் **சிங்களவர்.** அவர்கள் சிங்கள மொழி பேசுகின்றார்கள். ஆதலால் இத்தீவுக்குச் **சிங்களம்** என்னும் பெயர் வழங்குகிறது. சிங்களவர் புத்த மதத்தைச் சேர்ந்தவர். இங்குத் தமிழ் பேசும் இந்துக்களும் முஸ்லிம்களும் அதிகமாக வாழ்கிறார்கள்.

இங்குள்ள சமவெளிப் பகுதியில் **நெல்** பயிர் செய்யப்படுகிறது. கடற்கரைப் பகுதிகளில் **தென்னை மரங்கள்** அதிகமாக இருக்கின்றன. இங்கு வசிப்பவர்கள் கொப்பரை தேங்காய் நாரினால் தயாரிக்கப்பட்ட கயிறுகள், தேங்காய் எண்ணெய் முதலியவற்றைப் பல இடங்களுக்கும் அனுப்புகிறார்கள்.

இத்தீவின் மேற்குக் கரையிலுள்ள **கொழும்பு** இதன் தலைநகரமாக இருக்கிறது. இது ஒரு சிறந்த துறைமுகமாக விளங்குகிறது. இத்துறைமுகத்தில் உலகத்திலுள்ள பல நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள் தங்கிச் செல்கின்றன. இது சிறந்த வியாபாரத்தலமாகவும் விளங்குகிறது, இங்கிருந்து தேயிலை, இரப்பர் முதலிய பொருள்கள்

ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தீவில் **யாழ்ப்பாணம்** என்னும் இடத்தில் தமிழர்கள் அதிகமாக வசிக்கிறார்கள்.

பயிற்சி

1. இலங்கைத் தீவு எங்கு இருக்கிறது?
2. இலங்கையில் விளையும் பொருள்களை எழுதுக.
3. கொழும்பு எவ்வாறு சிறப்புப் பெற்றது?
4. இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதி எது?

33. நிலக்கரிச் சுரங்கங்களும், இரும்புத் தொழிற்சாலைகளும்

பெரிய தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களை ஓட்டுவதற்கு நிலக்கரி தேவைப்படுகிறது. நிலக்கரியைப் போல இரும்பும் தொழில் வளர்ச்சிக்கு முக்கியமான பொருளாக இருக்கிறது.

இந்தியாவில் **நிலக்கரி** வங்காளத்தின் மேற்குப் பாகத்தில் உள்ள **தாமோதர் நதிப்பள்ளத்தாக்**கில் கிடைக்கிறது. இங்கு உள்ள **ராணிகஞ்சு ஜெரியா, அஸன்ஸால்** முதலிய இடங்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. இங்கு எடுக்கப்படும் நிலக்கரி நம் நாட்டின் தேவைக்குப் போதாமையால் வெளிநாடுகளிலிருந்தும் நிலக்கரி தருவிக்கப்படுகிறது.

பூமிக்குள் ஆழமான சுரங்கங்களில் கெட்டியான பாறைகளாக இருக்கும் நிலக்கரியை வெட்டி யெடுத்து இயந்திரங்கள் மூலமாக வெளியே கொண்டு வருகிறார்கள். பிறகு அதனை தரத்துக்குத் தக்கபடி பிரித்தெடுக்கிறார்கள்.

நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகில் **இரும்பு** கிடைக்கிறது. இது பூமியின் கீழ் மண், கல், முதலியவற்றோடு சேர்ந்து பாறையாக இருக்கிறது. இதைத் தோண்டியெடுத்துக் காய்ச்சி இரும்பைத் தனியாகப் பிரிக்கிறார்கள்.

இரும்பைக் காய்ச்சுவதற்கு நிலக்கரி தேவைப்படுவதால் இரும்பு தொழிற்சாலைகள் நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகிலேயே அமைந்திருப்பதனால் இத்தொழில் இலாபகரமாக நடைபெறுகிறது. பீஹார் இராச்சியத்தில் உள்ள **ஜாம்ஷெட்பூர்** என்னும் இடத்தில் டாடா கம்பெனியாரின் இரும்பு, எஃகுத் தொழிற்சாலை இருக்கிறது. நமக்குத் தேவையான பல இரும்பு, எஃகுச் சாமான்கள், தண்டவாளங்கள் முதலியவை இத்தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன.


ஜாம்ஷெட்பூரில் செய்யப்படும் இரும்புச் சாமான்கள் நமது நாட்டில் அதிகமாக உபயோகப்படுகிறது.

பயிற்சி

1. நிலக்கரி சுரங்கங்கள் நம்நாட்டில் எங்கு இருக்கின்றன ?
2. இந்தியாவில் இரும்புத் தொழிற்சாலை எங்கு இருக்கிறது ?
3. நிலக்கரிக் கிடைக்கும் இடங்களில் இரும்புத் தொழிற்சாலைகள் அமைந்திருப்பதற்குக் காரணம் என்ன ?

34. இந்தியாவின் இராச்சியப் பிரிவுகள்

நம் இந்திய நாடு சுமார் நூற்றைம்பது வருடங்கள் ஆங்கிலேயரது ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்தது. 1947-ஆம் வருடம் ஆகஸ்டு



மாதம் **15-**ஆம் தேதி இது ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. இதற்கு முன்னர் ஒன்றாக இருந்த நம்நாடு அன்று முதல் **இந்தியா, பாகிஸ்தான்** என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மாகாணங்கள் என வழங்கப் பட்ட பகுதிகள், இப்பொழுது இராச்சியங்கள் எனக் கூறப்படுகின் றன. முன்பு சுதேச மன்னர்களால் ஆளப்பட்டுவந்த சமஸ்தானங்களும் இந்திய யூனியனில் சேர்க்கப்பட்டு இப்பொழுது இராச்சியங்கள் என்றே கூறப்படுகின்றன.

பம்பாய், சென்னை, ஆந்திரா, மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், பீஹார், மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம் என்னும் இராச்சியங்கள் இந்திய யூனியனில் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் கவர்னர் ஆட்சிக்கு உட்பட்டவை. இவை முதற் பிரிவு (A. பிரிவு) இராச்சியங்கள் ஆகும்.

திருவாங்கூர்-கொச்சி, மைசூர், ஐதராபாத் முதலியவை இரண் டாம் பிரிவு, (B. பிரிவு) இராச்சியங்கள் இவை ஒவ்வொன்றும் **இராஜப் பிரமுகர்** என்ற சுதேச மன்னர்கள் பரம்பரையைச் சேர்ந்தவரால் மக்கள் பிரதிநிதிகளாகிய மந்திரிசபை உதவியால் ஆளப்படுகின்றன.

டில்லி, ஆஜ்மீர், குடகு முதலிய இராச்சியங்கள் மூன்றும் (C பிரிவு) பிரிவைச் சேர்ந்தவை இவை கமிஷனர் இராச்சியங்கள் எனப் படும்.

சிந்து, மேற்குப் பஞ்சாப், பலுசிஸ்தானம், வட மேற்கு எல்லைப் புற மாகாணம், கிழக்கு வங்காளம் ஆகிய பகுதிகள் பாகிஸ்தானில் இருக்கின்றன.

1947ல் விடுதலைபெற்ற இந்தியா. 1950ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 26ஆம் தேதி குடியரசு நாடாக மாறியது. எனவே நமது நாடு இப்போது **இந்தியக் குடியரசு** நாடு எனப்படும்.

குடியரசு இந்தியாவில் **யூனியன் ஆட்சி, இராச்சிய ஆட்சி** என்னும் இரு பிரிவுகள் இருக்கின்றன. இந்திய யூனியனுக்குத் தலை வராக விளங்குபவர் **ஜனாதிபதி** என்று கூறப்படுவார். **ஸ்ரீராஜேந்திரப் பிரசாத்** என்பவர் இப்பொழுது நம் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார்.

ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறவும் நாட்டின் நிர்வாகத்தைக் கவ னிக்கவும் ஒரு மந்திரி சபை இருக்கிறது, அதன் தலைவர் பிரதம மந்திரியாக ஸ்ரீ ஜவஹர்லால் நேரு விளங்குகிறார். இம்மந்திரி சபை **லோக்சபை** என அழைக்கப்படும். பார்லிமெண்டின் உதவியால் அரசாட்சியை நடத்திவருகிறது.

இராச்சியத்தின் தலைவரான **கவர்னர்** அல்லது **இராஜப்பிரமுகர்** ஒரு மந்திரி சபையின் உதவியால் அரசாட்சியை நடத்துகின்றார். இம் மந்திரி சபையும் **சட்டசபை** எனப்படும் இராச்சிய சபையின் உதவி யால் நிர்வாகம் புரிகிறது.


நமது சென்னை இராச்சியத்தின் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா என்பவர். இப்பொழுது நமது இராச்சியத்தின் முதல் மந்திரியாக இருப்பவர் ஸ்ரீ **காமராஜ நாடார்** ஆவர்.

பயிற்சி

1. நம் நாடு எப்போது சுதந்திரம் பெற்றது?
2. இந்திய யூனியனும், இராச்சிய சபையும் எவ்வாறு ஆட்சி புரிகின்றன?
3. நமது சென்னை இராச்சியத்தின் கவர்னரும், முதல் மந்திரியும் யாவர்?

35. சென்னை இராச்சியத்தின் ஜில்லாக்கள்

நமது சென்னை இராச்சியம் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் முன்பு இருபத்தாறு ஜில்லாக்கள் இருந்தன.



1953ம் வருடம் அக்டோபர் மாதம் முதல் தேதி யன்று ஆந்திர மக்கள் வசிக்கும் பன்னிரண்டு ஜில்லாக்கள் தனிமையாகப் பிரிக்கப்பட்டு ஆந்திர இராச்சியம் அமைக்கப்பட்டதால், இப்பொழுது பதினன்கு ஜில்லாக்கள் நம் சென்னை இராச்சியத்தில் உள்ளன; ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு தலைநகரம் உண்டு. இந்நகரத்திலிருந்து **கலெக்டர்** என்னும் அதிகாரி ஜில்லாவின் நிர்வாகத்தைக் கவனிக்கிறர். கல்வி, வைத்தியம், போலீஸ் முதலிய இலாக்காக்களின் ஜில்லாத் தலைமை அதிகாரிகளும் இங்கு இருக்கிறர்கள். பின் வரும் அட்டவணையைக் கவனித்துச் சென்னை, ஆந்திர இராச்சியங்களின் ஜில்லாக்களின் அமைப்பையும் அவற்றின் தலைநகரங்களையும் தெரிந்து கொள்ளுங்கள் :

சென்னை இராச்சியம்

எண்	இயற்கைப் பிரதேசங்கள்	ஜில்லா	தலைநகரம்	மக்களது தொழில்
I.	கர்நாடகச் சமவெளிப் பிரதேசம்	1. சென்னை 2. செங்கற்பட்டு 3. வடஆர்க்காடு 4. தென்னர்க்காடு	சென்னை சைதாப்பேட்டை-செங்கற்பட்டு வேலூர் கூடலூர்	நிலக்கடலை, தினை முதலியவை பயிரிடுதல்
II.	காவிரிப் பள்ளத்தாக்கு	5. தஞ்சாவூர் 6. திருச்சிராப் பள்ளி 7. சேலம் 8. கோயம் புத்தூர்	தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி சேலம் கோயம்புத்தூர்	பயிர்த் தொழில், நெசவுத் தொழில், நூல் நூற்றல்
III.	மதுரைச் சமவெளி	9. திருநெல்வேலி 10. மதுரை 11. இராமநாத புரம்	திருநெல்வேலி மதுரை இராமநாதபுரம்—மதுரை	நெல், பருத்தி, புன்செய்ப் பயிர்கள் பயிர் செய்தல், நெசவுத் தொழில், பனை வெல்லம் காய்ச்சுதல்
IV.	மலைப் பிரதேசம்	12. நீலகிரி	நீலகிரி	தேயிலை, காப்பி பயிரிடுதல்
V.	மேற்குக் கரைச் சமவெளி	13. தென் கன்னடம் 14. மலையாளம்	மங்களூர் கோழிக்கோடு	கயிறு திரித்தல், மரம் வெட்டுதல்

ஆந்திர இராச்சியம்

எண்	இயற்கைப் பிரிவுகள்	ஜில்லா	தலை நகரம்	மக்களது தொழில்
I.	கர்நாடகச் சமவெளி	1. சித்தூர் 2. நெல்லூர்	சித்தூர் நெல்லூர்	பயிர்த் தொழில் பயிர்த் தொழில் மாடு வளர்த்தல்
II.	வட சர்க்கார்ப் பிரதேசம்	3. விசாகப் பட்டினம் 4. மேற்குக் கோதாவரி 5. கிழக்குக் கோதாவரி 6. கிருஷ்ணு 7. குண்டூர் 8. ஸ்ரீகாகுளம்	விசாகப் பட்டினம் ஏலூர் காக்கிநாடா மசூலிப்பட்டினம் குண்டூர் ஸ்ரீகாகுளம்	நெல், கரும்பு, புகையிலை பயிரிடுதல், சர்க்கரை செய்தல்
III.	தட்சிணப் பீடபூமிப் பிரதேசம்	9. கடப்பை 10. கர்னூல் 11. அனந்தபுரம்	கடப்பை கர்னூல் அனந்தபுரம்	பருத்தி பயிரிடுதல், நெசவுத் தொழில்

பயிற்சி

I. விடை எழுதுக :

1. சென்னை இராச்சியத்தில் அடங்கியுள்ள ஜில்லாக்களை எழுதுக.
2. ஆந்திர இராச்சியத்தில் உள்ள ஜில்லாக்கள் யாவை ?
3. நீ வசிக்கும் ஜில்லாவையும் அதன் தலைநகரையும் எழுதுக.

II. பொருத்துக.

1. விசாகப்பட்டினம்	கர்நாடக சமவெளி
2. கடப்பை	வட சர்க்கார் பிரதேசம்
3. நெல்லூர்	தட்சிண பீடபூமி
4. சேலம்	மலைப் பிரதேசம்
5. திருநெல்வேலி	காவிரிப் பள்ளத்தாக்கு
6. தென் கன்னடம்	மதுரைச் சமவெளி
7. நீலகிரி	மேற்குக்கரைச் சமவெளி

36. நீங்கள் வசிக்கும் தாலுக்கா

ஒவ்வொரு இராச்சியமும் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது என்று முன் பாடத்தின் மூலமாக அறிந்தோம். இது போலவே ஒவ்வொரு ஜில்லாவும் பல தாலுக்காக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தாலுக்காவிலும் பல கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு தாலுக்காவிற்கும் **தாசில்தார்** என்ற அதிகாரி ஒருவர் இருக்கிறார். இவர் தாலுக்காவின் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்கிறார். நிலவரி வசூல் செய்வது இவருடைய முக்கிய கடமையாகும்.

நீங்கள் வசிக்கும் ஊர் எந்த ஜில்லாவில் எந்தத் தாலுக்காவில் இருக்கிறது? உங்கள் ஊருக்கு அருகில உள்ள முக்கிய நகரங்கள் யாவை? உங்கள் ஜில்லாவில் உள்ள தாலுக்காக்கள் யாவை? இவற்றை யெல்லாம் ஜில்லாவின் படத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் ஜில்லாவில் விளையும் பொருள்களைப்பற்றியும், நடைபெறும் தொழில்களைப் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் ஊரிலிருந்து செல்லக்கூடிய சாலைகளையும், இருப்புப் பாதைகளையும் பற்றியும், நீங்கள் வசிக்கும் ஊரில் உள்ள முக்கியமான இடங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள்.

இவ்வாறு உங்கள் ஜில்லாவைப் பற்றியும், தாலுக்காவைப்பற்றியும் அறிந்து கொள்வது மிகவும் நன்மையைக் கொடுக்கும்.

பயிற்சி

1. **பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்:**

உங்கள் ஊர் பெயர்	தாலுக்கா	ஜில்லா	விளை பொருள்கள்	நடைபெறும் தொழில்	முக்கியமான இடங்கள்

